விலை ரூபா 7.00

# உதயன்

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 3 திங்கட்கிழமை (17-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:111

### பேச்சுக்குச் செல்லும் குழுவை மக்கள் உணர்ச்சி பூர்வமாக வழியனுப்பினர்

# தாக்குதல்கள் இனி நடக்காது என்ற உத்தரவாதம் பெறச் செல்கின்றோம்

## கிளிநொச்சியில் ஹெலியில் ஏறமுன் பாலசிங்கம் உதயனுக்குத் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச்17

**பெரும் இக்கட்டான ஒரு சூழ்நிலையில் ஜப்பான் சமாதானப் பேச்சுக்குச் செல்கின்றோம். எமது கப்பல் தாக்கி அழிக்கப்பட்டு, எமது அமைப்பும் போராளிகளும் பெரும் பதற்ற நிலைக்கு உள்ளாகியிருக்கையில் அப்பேச்சில் பங்குபற்றுகின்றோம். போராளிகளின் உணர்வுகளுக்கு ஏற்றவாறு - கப்பல் தாக்கப்பட்டமைக்கு எதிரான - எமது நிலைப் பாட்டை ஜப்பான் பேச்சுக்களில் விளக்கிக் கூறுவோம். எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறமாட்டா என்ற உறுதிப்பாட்டை அரசிடமிருந்து பெறப்போகிறோம்.**

நாளை ஜப்பானில் ஆரம்பமாகும் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்றுவதற்காக கிளிநொச்சியில் இருந்து நேற்று முற்பகல் கொழும்புக்குப் புறப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

எமது தலைவர் பிரபாகரன் கப்பல் தாக்குதலுக்கு எதிராகத் தெரிவிக்கும் கடும் ஆட்சேபத்தையும் கண்டனத்தையும் ஜப்பான் பேச்சின் ஆரம்பத்தில் தெரிவிப்போம். மக்களினதும், போராளிகளினதும் மன உணர்வுகளையும்

(14 ஆம் பக்கம் பார்க்க)



வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தின் பஞ்சரத உற்சவம் இன்று காலை நடைபெறுகின்றது.

கடந்த ஆண்டு மஹோற்சவத்தின்போது பஞ்ச மூர்த்திகள் ரதங்களில் பவனிவந்த காட்சி இது.

## அரசுக் குழு காலையில் புறப்பட்டது; புலிகளின் குழு நேற்று இரவு பயணம்

கொழும்பு,மார்ச்17

ஜப்பான் சமாதானப் பேச்சில் பங்குபற்றுவதற்காக இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகள் நேற்றுக்காலை கட்டுநாயக்காவில் இருந்து ஜப்பானுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கிளிநொச்சியில் இருந்து இரண்டு ஹெலிகொப்டர்களில் நேற்று பிற்பகல் கொழும்பை வந்தடைந்த விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், நேற்று இரவு கட்டுநாயக்காவில் இருந்து ஜப்பானுக்குப் பயணமானார்கள்.

அரசாங்கப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைமைதாங்கும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து புறப்படுவதற்கு முன தகவல் தருகையில், கிழக்குக் கடலில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து ஜப்பான் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படும் எனச் சொன்னார்.

ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தை வெற்றிகர

(14 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவும் இனிமேல் வவுனியா நீதிவான் பொறுப்பில்

கொழும்பு,மார்ச்17

முல்லைத்தீவு மாவட்ட நீதி, நிர்வாக நடவடிக்கைகளையும் சேர்த்து மேற்கொள்ளுமாறு வவுனியா மாவட்ட நீதிவான் சிறிநிதி நந்தசேகரனுக்கு நீதியமைச்சு பணிப்புரை விடுத்துள்ளது.

புலிகளின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை அரசின் நீதி, நிர்வாக அலகுகள் செயலிழந்துள்ள நிலையில், கடந்த பல வருடங்களாக புலிகளே அந்தப் பகுதிகளில் நீதி, நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கை அரசின் நீதிமன்றங்களோ, பொலிஸாரோ இல்லாத முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனியா மாவட்ட நீதிவானால் இந்தப் பணியைச் செய்வது சிரமம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



அமெரிக்கா இலங்கைக்கு வழங்கவிருக்கும் கரையோர ரோந்துக் கப்பல் இதுதான். 1967 ஆம் ஆண்டு அமெரிக்காவில் கட்டப்பட்ட இந்தக் கப்பலின் பெயர் கரேஜஸ் (Courageous) இதில் ஹெலி இறங்கு தள வசதி உண்டு.

### புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட விவகாரம்:

## கண்காணிப்புக்குழுவின் விசாரணை அறிக்கை புலிகளிடமும் அரசிடமும் நேற்று கையளிப்பு

கொழும்பு,மார்ச்17

முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் மூழ்கடிக்கப்பட்ட புலிகளின் கப்பல் தொடர்பான விசாரணை அறிக்கையை இலங்கை கண்காணிப்புக்குழு நேற்று அரசிடமும் விடுதலைப் புலிகளிடமும் கையளித்தது.

இலங்கை கண்காணிப்புக் குழுவின் ஊடகப் பேச்சாளர் டெல்கிசன் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்த விசாரணை அறிக்கை புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் நேற்று நண்பகல் 12 மணிக்கு கையளிக்கப்பட்டது. ஜப்பானில் ஆரம்பமாகவுள்ள அரசு - புலிகள் பேச்சுக்களில் கலந்துகொள்ள ஜப்பான் செல்வதற்காக அவர் கட்டுநாயக்காவுக்கு வந்தபோதே அறிக்கை கையளிக்கப்பட்டதாக டெல்கிசன் தெரிவித்தார்.

அரசுக்கான அறிக்கை நேற்று பிற்பகல் 3 மணியளவில் பாதுகாப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

அறிக்கையில் அடங்கியுள்ள விடயங்கள் குறித்து அவர் கருத்து வெளியிட மறுத்துவிட்டார். (ஐ)

## தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் கப்பலில் ஆட்டிலறிகள் இருந்திருக்க சாத்தியமில்லை

### பாதுகாப்புத்துறை ஆய்வாளர்கள் கருத்து

கொழும்பு,மார்ச்17

கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் கப்பலில் 130 மில்லிமீற்றர் ஆட்டிலறிகள் இருந்தன என்ற குற்றச்சாட்டை கொழும்பிலுள்ள பாதுகாப்புத்துறை ஆய்வாளர் மறுத்துள்ளார். அவ்வாறு இருக்கச் சாத்தியமே இல்லை என்று தனது வாதத்துக்கு பல ஆதாரங்களையும் அவர் முன் வைக்கிறார்.

'சண்டே ரைம்ஸ்' ஆங்கிலப் பத்திரிகையில் பாதுகாப்புத்துறை பத்தி எழுத்தாளர் இக்பால் அத்தாஸ் பின் வரும் சாரப்பட எழுதியிருக்கிறார்.

தாக்கியழிக்கப்பட்ட புலிகளின் ஆயுதக் கப்பலில் இருந்த ஆயுதங்கள் என்ற பெயரில் பட்டியல் ஒன்று அரசுக்குக் கிடைத்தது. அந்தப் பட்டியலில் புலிகளின் கப்பலில் ஆயுதங்களுடன் 130 மில்லிமீற்றர் ஆட்டிலறிகள் பத்தும் இருந்தன என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த விடயத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலர் எந்தவிதமான ஆராய்வுமின்றி ஊடகங்களுக்குக் கசியவிட்டு செய்தார். அந்த ஆயுத விவரத்தின் தரம்/ரியம் சரியாக உணரப்படவில்லை என்பதே உண்மை.

ஏனெனில், 130 மில்லிமீற்றர் ஆட்டிலறியின் ஒரு பகுதியே சுமார் ஆறு தொன்னுக்கும் அதிக எடையுடையது. குழாய் மிகவும் நீளமானது. அதை நடுக்கடலில் வைத்து புலிகளின சிறிய ட்றோலர்களுக்கு மாற்றி, அதைக் கரைக்குக் கொண்டு வந்து சேர்ப்பது இயலாத காரியம். இந்த ரக ஆட்டிலறிகளை கப்பலில் இருந்து இறக்குவது என்றால் நிச்சயம் சக்தி வாய்ந்த பெரிய பாரம் தூக்கியின் (கிரேனின்) உதவி தேவை. அப்படிப்பட்ட பெரிய கிரேன் புலிகளின் கப்பலில் இல்லை. தவிரவும் புலிகளின் கப்பலில் ஆட்டிலறிகள் இருந்தன என்று வாதத்திற்காக ஒப்புக் கொண்டாலும் பத்து ஆட்டிலறிகளை புலிகள் கப்பலில் கொண்டுவர முடியாது.

புலிகளின் கப்பலில் 10 தொன் எடையுள்ள பொருள்களைத் தூக்கக கூடிய கிரேன் இருந்தது என்று கூறப்பட்டபோதிலும் அந்தக் கிரேன் மூலம் எல்லா ஆட்டிலறிகளையும் புலிகளின் ட்றோலர்களுக்கு மாற்ற முடியாது. பெரிய ஆட்டிலறி பாகங்களை கொள்ளக்கூடிய ட்றோலர் கடற்புலிகளிடம் இல்லை. ஆகவே, புலிகளின் கப்பலில் ஆட்டிலறிகள் கொண்டுவரப்பட்டன என்ற கதை நம்பக்கூடியது அல்ல.

(14 ஆம் பக்கம் பார்க்க)











# தென்னாபிரிக்க அணிக்கு புதிய தலைவர் ஸ்மித்!


ஸ்மித்

டேர்பன்,மார்ச்17

தென்னாபிரிக்க அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட ஷேன் பொலக்கின் இடத்திற்கு அணியின் ஆரம்பத்துடுப்பாளர் கிராண்ட் ஸ்மித் (வயது 22) நியமிக்கப்பட்டுள்ளார். நாட்டின் ஐக்கிய கிரிக்கெட் சபை நேற்று இதை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

உலகக் கிண்ணப் போட்டியில் ஏற்பட்ட தோல்விக்கு பொலக்கின் தலைமை சரியில்லாமையே காரணம் என்று கருதி, தென்னாபிரிக்க ஐக்கிய கிரிக்கெட் சபை அவரை சனியன்று பதவி நீக்கம் செய்தது. அவருக்குப் பதிலாக அணித் தலைவர் ஒருவரை தெரிவு செய்வது தொடர்பாக சபை தீவிரமாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளது.

இந்த நிலையில் முன்னதாக சபையின் மூத்த நிர்வாகியான லோகன் நாயுடு தென்னாபிரிக்கத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் "அணித் தலைவர் கிராண்ட் ஸ்மித்தின் பின்னால் அனைத்து வீரர்களும் அணிவகுக்க வேண்டும்" - என்று தெரிவித்திருந்தார். ஆனால், தலைவராக ஸ்மித் நியமிக்கப்படுவது நிச்சயமா? என்று செய்தியாளர்கள் (13ஆம் பக்கம் பார்க்க)

# அரைஇறுதியில் ஆஸியை வெல்ல இலங்கையால் முடியும்



உலகக்கிண்ண அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை இலங்கை வெல்ல வாய்ப்பு இருக்கிறது என இந்திய அணித் தலைவர் கங்குலி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியுள்ளதாவது:-

"இறுதி ஆட்டத்தில் எந்த அணியையும் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். இருந்த போதிலும் இலங்கையைச் சந்திக்க விரும்புகிறோம்.

அரையிறுதியில் ஆஸ்திரேலியாவை வெல்ல இலங்கைக்கு நல்ல வாய்ப்பு உள்ளது. அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இலங்கைக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணத்தினால்தான் நியூஸிலாந்துடன் நாங்கள் தீவிரமாக விளையாடி வென்றோம்.

தொடர்ந்து வெற்றிப் பாதையில் பயணிக்க விரும்புகிறோம். அரையிறுதியில் தன்னம்பிக்கையுடன் நுழைகிறோம்.

ஆஸ்திரேலியாவுடனான இலங்கையின் அரையிறுதி ஆட்டம் நடைபெறும் போட் எலிசபெத் மைதானம் சுழற் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமானது. என்வே, இலங்கையின் சுழற் பந்து வீச்சு ஆஸ்திரேலியாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்" - இவ்வாறு கங்குலி கூறினார்.

வழக்கமாக ஆட்டம் தொடங்குவதற்குமுன் வார்த்தை விளையாட்டுக்களில் ஆஸ்திரேலியர்கள்தான் இறங்குவார்கள். இம்முறை இந்த விளையாட்டில் கங்குலி இறங்கியுள்ளார். (ம-5)

# திராவிட்டின் பிடியை நழுவவிட்டபின் அழுதுவிட்டேன்



'திராவிட் கொடுத்த பிடியை விக்கெட் காப்பாளர் மெக்கலம் நழுவவிட்டதை என்னால் தெளிவாகப்பார்க்க முடியவில்லை. என் கண்களில் பொங்கிவந்த கண்ணீர் அதை மறைத்து விட்டது." - இவ்வாறு கூறினார் நியூஸிலாந்து அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங்.

செஞ்சூரியனில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் நியூஸிலாந்தை வென்றது.

ராகுல் திராவிட் ஓர் ஓட்டம் எடுத்திருந்த போது கொடுத்த சுலபமான பிடியை மெக்கலம் நழுவவிட்டார். அப்போது அணியின் எண்ணிக்கை 22 - 3 ஆக இருந்தது.

தோல்விக்குப் பின் பிளமிங் கூறியதாவது:-

"இந்தியாவின் இடதுகைப் பந்து வீச்சாளர்கள் மிக அற்புதமாகப் பந்து வீசி வருகின்றனர். சஹீர்கான் விக்கெட்டுக்களை வீழ்த்தினாலும், நெஹ்ரா அற்புதமான பந்து வீச்சாளராக உருவாகியுள்ளார்.

இந்தியாவின் பந்துவீச்சு ஆஸியின் பந்துவீச்சுக்கு இணையாக உள்ளது என்றே கூறவேண்டும். 5 ஆவது பந்துவீச்சாளர்தான் இந்தியாவுக்கு இப்போதைய கவலை. அதுபோன்ற நிலை ஆஸ்திரேலியாவுக்கும் உள்ளது. கிண்ணத்தை வெல்லும் அணியாக நியூஸிலாந்து விளையாடவில்லை. வெள்ளிக்கிழமை ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்றிருந்தாலும் துடுப்பாட்டத்தைத்தான் தேர்ந் தெடுத்திருப்பேன். (13ஆம் பக்கம் பார்க்க)


ஆஸ்திரேலியா - கென்யா ஆட்டத்தில் ஆட்டநாயகனான ஹார்ஸ். 8.2 ஓவர்கள் வீசி 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி வியக்க வைத்தார்.

## அரையிறுதி நடுவர்கள் விவரம் அறிவிப்பு

ஜொகன்னர்ஸ்பேர்க்,மார்ச்17

நாளை நடைபெறவுள்ள இலங்கை - ஆஸ்திரேலியா இடையில் போர்ட் எலிசபெத்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் இங்கிலாந்தின் டேவிட் ஷெப்பட்டும் தென்னாபிரிக்காவின் ரூடி ஹேர்ட்ஸனும் நடுவர்களாகக் கடமையாற்றுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தின் பில்லி பௌடென் மூன்றாவது நடுவராகவும், ஆட்ட நடுவராக மேற்கிந்தியாவைச் சேர்ந்த கிலிவ் லொயிட்டும் கடமையாற்றுவர்.

வியாழக்கிழமை டேர்பனில் நடைபெறவுள்ள இந்தியா - கென்யா இடையிலான இரண்டாவது பகல் இரவு அரையிறுதி ஆட்டத்தில், மேற்கிந்தியாவின் ஸ்ரீவ் பக்னரும் ஆஸ்திரேலியாவின் டேரல் ஹார்பரும் நடுவர்க (13ஆம் பக்கம் பார்க்க)

# ஒருநாள் போட்டியிலிருந்து ஹேர்ஸ்டன் ஓய்வு பெற்றார்


ஹேர்ஸ்டன்

கேப்டவுன்,மார்ச்17

தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாளர்களில் ஒருவரான ஹரி ஹேர்ஸ்டன் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார். நேற்று ஞாயிறுக்கிழமை அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

டெஸ்ட் கிரிக்கெட்டில் தொடர்ந்தும் விளையாடுவதற்கு அவர் தீர்மானித்துள்ளார்.

அலன் டொனால்ட், ஜொன்டி ரோட்ஸ் ஆகியோரைத் தொடர்ந்து தென்னாபிரிக்க அணியில் இருந்து ஓய்வுபெறும் மூன்றாவது நபர் ஹேர்ஸ்டனாவார் (வயது 35). இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் தென்னா (13ஆம் பக்கம் பார்க்க)

# விடைபெற்றார் விட்டல்!


விட்டல்

ஈஸ்ட் லண்டன்,மார்ச்17

ஸிம்பாப்வே அணி வீரர் ஹை விட்டல், சர்வதேசப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக நேற்று அறிவித்தார். கடந்த இரு நாள்களில் அணியில் இருந்து ஓய்வுபெறும் மூன்றாவது நபர் இவராவார்.

"இந்த விடயத்தை எனது அணிச் சகாக்களுக்கு முதல் நாள் இரவே அறிவித்துவிட்டேன். நான் சிறந்த 10 வருடங்களை கிரிக்கெட்டில் பெற்றுள்ளேன். எல்லோருடனும் நான் மகிழ்ச்சியாக இருந்துள்ளேன். ஆனால் காலம் கடந்துவிட்டது. நான் இனி எனது குடும்ப வர்த்தகத்தில் கவனம் செலுத்தப் போகின்றேன்." - என்றார் விட்டல்.

ஏற்கனவே ஸிம்பாப்வே அணியின் மிகச் சிறந்த (13ஆம் பக்கம் பார்க்க)

# ஒலங்கா தலைமறைவு!

லண்டன்,மார்ச்17

ஸிம்பாப்வே அணியின் வேகப் பந்துவீச்சாளர் ஹென்றி ஒலங்கா தலைமறைவாகி உள்ளார்.

கடந்த சனியன்று இலங்கையுடனான ஆட்டத்தின் பின்னர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தெரிவித்த ஒலங்கா, அதன்


ஒலங்கா

பின்னர் எங்கு சென்றார் என்பது தெரியவில்லை.

தான் பிறந்த கென்யாவில் ஒலங்கா தஞ்சமடையலாம் அல்லது இங்கிலாந் (13ஆம் பக்கம் பார்க்க)

SHARP Action of the day


ஸிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் பிடிஒன்றை எடுக்கும் ஜயசூரிய.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ் BROWNS ELECTORINICS Browns




## அரையிறுதி ஆட்டங்கள்

| திகதி | அணிகள் | | | மைதானம் | நேரம் |
|---|---|---|---|---|---|
| 18 செவ்வாய் | ஆஸ்திரேலியா | Vs | இலங்கை | போர்ட் எலிசபெத் | 2.00 p.m. |
| 20 வெள்ளி | இந்தியா | Vs | கென்யா | டேர்பன் | 6.30 p.m. |











# அமெரிக்காவின் கெடு இன்று முடிவடைகிறது: போரை எதிர்கொள்ள ஈராக் தயாராகிறது!

பேரழிவு ஆயுதங்களை ஈராக் தயாரித்துவருவதாக அமெரிக்கா புகார் கூறியதைத் தொடர்ந்து ஐ.நா. ஆயுதக்குழுவினர் ஈராக்கில் சுற்றுப் பயணம் செய்து ஆயுத சோதனை நடத்தினார்கள். இந்த ஆயுதக்குழுவினர் ஐ.நா. சபையில் தாக்கல் செய்த அறிக்கையில் பேரழிவு ஆயுதங்கள் ஈராக்கில் இருப்பதற்கான ஆதாரங்கள் இல்லை. ஆனாலும், அதி பயங்கர ஏவுகணைகளை ஈராக் அழித்து வருகிறது என்று தெரிவித்துள்ளனர். ஆனாலும், பேரழிவு ஆயுதங்களையும் இரசாயன, உயிரியல் ஆயுதங்கள் பற்றிய விவரங்களையும் ஈராக் மறைத்து விட்டது என்று அமெரிக்கா புகார் கூறிவருகிறது. இந்தப் பேரழிவு ஆயுதங்களை அழிக்க ஈராக்குக்கு அமெரிக்காவும் பிரிட்டனும் இன்றுவரை கெடு விதித்துள்ளன. இந்த காலக்கெடுவுக்குள் ஈராக் பேரழிவு ஆயுதங்களை அழிக்காவிட்டால் அதன்மீது போர் தொடுப்போம் என்று அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின் ஆகிய நாடுகள் ஐ.நா. பாதுகாப்பு சபையில் தீர்மானம் கொண்டு வந்தன. இந்தக் கெடு இன்றுடன் முடிவடைகின்றது. ஈராக் மீது போர்தொடுப்பதை சீனா, பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி போன்ற நாடுகள் கடுமையாக எதிர்க்கின்றன. ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ஈராக் மீது போர் நடவடிக்கைக்கான தீர்மானத்துக்கு ஆதரவு திரட்டுவதில் அமெரிக்கா தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டது. ஆனாலும், அமெரிக்காவுக்கு போதுமான ஆதரவு கிடைக்கவில்லை.

ஈராக்மீது போர் தொடுக்கும் அமெரிக்காவின் தீர்மானம் ஐ.நா. சபையில் தோல்வி அடைந்துவிடும் என்பதால் அதை வாபஸ் பெற்றுவிட அமெரிக்கா ஆலோசித்து வருகிறது. அத்துடன் ஐ.நாவின் ஒப்புதல் இன்றியே தன்னிச்சையாக ஈராக் மீது போர் தொடுக்க தயாராகி வருகிறது. இதற்காக அமெரிக்கா வளைகுடா பகுதியில் படைகளை குவித்து வருகிறது. ஈராக்கை சுற்றி உள்ள நாடுகளில் 3 லட்சம் வீரர்களை ஏற்கனவே அமெரிக்கா குவித்துள்ளது. இப்போது இந்த வீரர்களின் எண்ணிக்கை 4 லட்சமாக அதிகரித்துள்ளது. அமெரிக்காவுக்கு உதவியாக பிரிட்டனும் 50 ஆயிரம் வீரர்களை அனுப்பிவைத்துள்ளது. பேரழிவு ஆயுதங்களை ஈராக் வைத்திருப்பதாகக்கூறும் அமெரிக்கா, 6 போர் கப்பல்களை வளைகுடாப் பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளது. இந்த விமானம் தாங்கிப் போர்க் கப்பல்களில் 800 குண்டு வீச்சு விமானங்களும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த விமானங்கள் தொடர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. ஈராக் எல்லையை ஒட்டியுள்ள குவைத்திலும் அமெரிக்கா தனது தரைப் படையினரைக் குவித்து வைத்துள்ளது. இந்த வீரர்களும் தீவிர போர்ப் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். ஈராக்மீது தாக்குதலைத் தொடங்கும் பட்சத்தில் செங்கடல் பகுதியில் இருந்து விமானம் மற்றும் ஏவுகணைத் தாக்குதலை நடத்த அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது. ஈராக் அருகே உள்ள துருக்கியில் இருந்து தாக்குதலை நடத்த அமெரிக்கா முதலில் முடிவு செய்திருந்தது. ஆனால், துருக்கி தங்கள் நாட்டில் அமெரிக்கப் படைகள் தங்கியிருந்து ஈராக்மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டது. துருக்கி இந்தப் போரில் நடுநிலை வகிக்கிறது. இதனால், அமெரிக்கா தனது போர்த்திட்டத்தில் புதிய போர் வியூகம் வகுத்துள்ளது. இதனைத் தொடர்ந்து பேரழிவு ஆயுதங்கள் கொண்ட 2 கப்பல்கள் அணு ஆயுதங்களை ஏற்றிய 3 நீர்மூழ்கிக் கப்பல்களையும் செங்கடல் பகுதிக்கு அமெரிக்கா அனுப்பிவைத்துள்ளது. மொத்தம் 15 கப்பல்களை அமெரிக்கா செங்கடல் பகுதிக்கு அனுப்பிவைக்கும். இந்தக் கப்பல்களிலிருந்து ஏவுகணை மற்றும் விமானத் தாக்குதலை அமெரிக்கா மேற்கொள்ளும். இந்தத் தாக்குதல் திட்டத்துக்கு சவூதி அரேபியா உதவி செய்யும்.

அமெரிக்கா எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தலாம் என்பதால் ஈராக்கும் அதைச் சமாளிக்கத் தயாராகி வருகின்றது. புதிதாக அமைக்கப்பட்டுள்ள தற்கொலைப் படையினரும் அமெரிக்கப் படைகளை எதிர்க்கத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளனர். அமெரிக்காவுக்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் பாக்தாத்தில் நேற்றுப் பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியில் தற்கொலைப் படையினரும் கலந்துகொண்டனர். இந்தத் தற்கொலைப் படையில் பெண்களும் இடம்பெற்றுள்ளனர். அமெரிக்காவின் தாக்குதலை சமாளிப்பது குறித்து ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தனது இராணுவ அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார். அவரது மகன் குவாசியும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஈராக் மீது போர் தொடுத்தால் அமெரிக்காவுக்கு பெருத்த சேதத்தை ஏற்படுத்துவோம். ஈராக் மக்கள் அமெரிக்காவை முறியடிப்பார்கள் என்று சதாம் ஹுசைன் ஆவேசமாகப் பேசினார். ஈராக் மீது போர் தொடுப்பதை அமெரிக்க மக்களும் கடுமையாக எதிர்க்கிறார்கள். போர்த் திட்டத்தைக் கைவிடக் கோரி ஆயிரக்கணக்கான அமெரிக்கர்கள் வாஷிங்ரனில் வெள்ளை மாளிகையை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். (ஏ)

கிளிநொச்சியிலிருந்து ஹெலியில் புறப்படுவதற்கு முன் அன்ரன் பாலசிங்கம் மகளிர் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தமிழினி மற்றும் உதவியாளர்களுடன் உரையாடுவதை முதலாவது படத்திலும் - சு.ப.தமிழ்ச்செல்வன் ஹெலிக்குள் அமர்ந்திருப்பதை அடுத்த படத்திலும் காணலாம்.

# கற்பிட்டிப் பகுதி மீனவர்களின் பிரச்சினை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும்

## அதுவரை இருதரப்பும் தொழிலைச் செய்ய வேண்டுமென முடிவு

புத்தளம்,மார்ச்17

கற்பிட்டிப் பகுதியில் இரு பிரதேச மீனவர்களிடையே நேற்றுமுன்தினம் மூண்ட மோதல் தற்காலிகமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. மோதலில் ஈடுபட்ட இரு குழுவினரையும் அரசியல்வாதிகள், மதகுருமார்கள், பொலீஸார் ஆகியோர் அழைத்து பேச்சு நடத்தியதையடுத்தே தற்காலிகத் தீர்வு காணப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஏற்பட்ட மோதலின் போது மீன்பிடிப்படகுகள் சேதமாககப்பட்டன; மீனவர்கள் பலர் தாக்குதலுக்கு இலக்காகினர். மோதல் நடந்த வேளை கடைகள் யாவும் இழுத்து மூடப்பட்டன. நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

மோதலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காகப் பொலீஸார் கண்ணீர்ப்புகையையும் பிரயோகித்தனர்.

நீர்கொழும்பு பகுதி மீனவர்கள் கற்பிட்டி பகுதியில் 'லைலா' மீன்பிடி வலைகளைப் பாவித்து மீன்பிடிப்பதை கற்பிட்டிப் பகுதி மீனவர்கள் முற்றாக எதிர்த்ததோடு ஆட்சேப நடவடிக்கைகளிலும் ஈடுபட்டது தெரிந்ததே.

இதனையடுத்தே கடந்த சனிக்கிழமை நீர்கொழும்பு மீனவர்களுடன் மோதல் ஏற்பட்டது. இம் மோதலையடுத்து புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாலித்த ரங்க பண்டார, புத்தளம் தொகுதி ஐ.தே.கட்சி அமைப்பாளர் எம்.ஐ.பி.ஹாபி, கல்பிட்டி பிரதேச சபைத் தலைவர் எம். றியாஸ் ஆகியோர் உடனடியாகச் செயற்பட்டு இரு மீனவ குழுக்களையும் அழைத்து பேச்சு நடத்தினார்கள். மதகுருமார்கள், பொலீஸ் அதிகாரிகள், மீனவ குழுக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

பிரச்சினைக்கு முடிவு காணப்படாததால் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த விஜயசேகராவூடாக பிரச்சினையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்வது எனவும், அதுவரை இரு தரப்பினரும் அமைதியுடன் தமது தொழிலை மேற்கொள்ள வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

### இயன் மார்ட்டினுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்17

சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும் சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதில் தீவிர அக்கறை கொண்டவருமான இயன் மார்ட்டினை கடந்த வெள்ளியன்று ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் (பெருமாள் அணி), ஈரோஸ் ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் கூட்டாகச் சந்தித்துப் பேசினர். ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஈ.பி.டி.பி. தூதுக்குழுவும், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் சார்பில் சுகு, ஈரோஸின் சங்கர் ராஜி ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் போது கடந்த ஒரு வருட காலத்தில் புலிகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் மற்றும் ஜனநாயக விரோத செயல்கள் குறித்து திகதி வாரியான பட்டியல் ஒன்றையும் முழு விவரங்களுடன் ஈ.பி.டி.பியினர் சமர்ப்பித்தனர் - என்று ஈ.பி.டி.பி. விடுத்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# கிழக்கில் உல்லாசப் பயணத்துறை விருத்திக்குப் பல திட்டங்கள்

## ஹோட்டல் திறப்பு விழாவில் அமைச்சர் ஹக்கீம் உரை

நிந்தவூர்,மார்ச்17

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற இவ்வேளையில், கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பிரயாணத் துறையை அபிவிருத்தி செய்ய கிழக்கு அபிவிருத்தி அமைச்சும் உல்லாசப் பயணத்துறை அமைச்சும் இணைந்து பல திட்டங்களை வகுத்துள்ளன என்று துறைமுக, கப்பற்றுறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் பொத்துவில் அறுகம்பையில் "திரீ ஸ்டார் ஹோட்டல்" திறப்பு விழாவில் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டு அமைச்சர் உரையாற்றினார்.

ஹோட்டல் உரிமையாளர் டாக்டர் வீ.அருளானந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கௌரவ அதிதிகளாக சுகாதார அமைச்சர் பி. தயாரத்ன, நீதி அமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார, நாடாளுமன்ற உறுப்பினரும் 'நுஆ' தலைவியுமான பேரியல் அஷ்ரப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள், அதிதிகள் ஆகியோர் ஹோட்டல் நிறுவப்பட்ட முயற்சியை பாராட்டியும், வாழ்த்தியும் உரையாற்றினர். (ஐ)

# 3 கட்சிகளின் பிரதிநிதிகள் ஹெல்கிஸனோடு பேச்சு

கொழும்பு,மார்ச்17

மூன்று தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸனைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), ஈரோஸ் ஆகிய தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளே இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது ஈ.பி.டி.பி. சார்பில் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். தவராசா, எஸ்.சிவதாசன் மற்றும் ஊடகப் பேச்சாளர் எஸ்.விக்கினேஸ்வரன், ஆகியோரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் சுகுவும், ஈரோஸ் சார்பில் சங்கர் ராஜியும் கலந்து கொண்டனர் என்று ஈ.பி.டி.பி. அமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-6)

# ஆறு கிலோ ஹெரோயினுடன் சென்னையில் இலங்கையர் கைது!

கொழும்பு,மார்ச்17

இலங்கையைச் சேர்ந்த ஒருவர் ஆறு கிலோகிராம் ஹெரோயினுடன் சென்னையில் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

சம்பந்தப்பட்ட நபர் சென்னையிலிருந்து ஒரு வாகனத்தில் பயணம் செய்துகொண்டிருக்கையில் தமிழ்நாடு போதைவஸ்து ஒழிப்பு பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார். இரு பொதிகளில் ஹெரோயின் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட ஹெரோயினின் பெறுமதி சுமார் 6கோடி ரூபா எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ)

# பாலாவியில் வாலிபருக்கு துவக்குச்சூடு!

புத்தளம்,மார்ச்17

கடந்த சனிக்கிழமை புத்தளம் பகுதியிலுள்ள பாலாவி எனும் இடத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் புத்தளம் நகரைச் சேர்ந்த எம்.றிஸாம் (22) எனும் வாலிபர் காயமுற்று முந்தல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். பின்னர் ராகம வைத்தியசாலைக்கு விரையப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புத்தளம் பொலீஸார் இச்சம்பவம் குறித்து புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில், சுமார் 26 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவரின் சடலமொன்றை புத்தளம் பொலீஸார் கடந்த வெள்ளியன்று கண்டெடுத்தனர்.

புத்தளம் பகுதியிலுள்ள தப்போவ எனும் இடத்திலுள்ள கருவலகஸ்வெவ என்னும் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட இச்சடலத்தின் கைகள் இரண்டும் பின்னால் கட்டப்பட்டிருந்தன. தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயமும் காணப்பட்டது.

ஆளடையாளம் காண்பதற்காக புத்தளம் தள வைத்தியசாலையில் பிரேதம் வைக்கப்பட்டுள்ளது. பொலீஸார் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஐ-9)

## இலங்கை மின்சார சபை
### யாழ்.பிரதேச அலுவலகம்
### மின்பாவனையாளர் சேவை நிலைய மாற்றங்கள்

தற்போது யாழ்ப்பாணம், பிறவுண் வீதி, அரசடி வீதிச் சந்தியில் இயங்கிக்கொண்டிருக்கும் யாழ்.பராமரிப்பு மின்பாவனையாளர் சேவை நிலையம் (திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், இருபாலை, கோண்டாவில் கிழக்கு, கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி, நீர்வேலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது) 2003.03.19 தொடக்கம் கொக்குவில், குளப்பிட்டிச் சந்தி, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கட்டடம் ஒன்றுக்கு இடம்மாறவுள்ளது என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகிறேன்.

இதுவரை சுன்னாகம் மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட தாவடி, சுதுமலை ஆகிய பிரதேசங்கள் 2003.04.01 ஆம் திகதி தொடக்கம் மேற்குறித்த நிலையத்தின் கீழ்வருகின்றன. யாழ்.பராமரிப்பு மின்பாவனையாளர் சேவை நிலையத்திற்குட்பட்ட நீர்வேலி, கரந்தன் ஆகிய பிரதேசங்கள் சுன்னாகம் சேவை நிலையத்துடன் இத்திகதிமுதல் இணைக்கப்படுகின்றன.

அதேதினம் முதல் சுன்னாகம் சேவை நிலையத்தின் கீழ் இதுவரை இருந்த இளவாலை, மாதகல் ஆகிய பிரதேசங்கள் சித்தன்கேணியில் இயங்கிவரும் வட்டுக்கோட்டை மின்பாவனையாளர் சேவை நிலையத்துடன் சேர்க்கப்படுகின்றன.

இந்த மாற்றங்களை அவ்வப்பகுதி மின்பாவனையாளர்கள் கவனத்திலெடுத்து உரிய அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு உங்கள் மின்னிணைப்பு சம்பந்தமான வேலைகளைச் செய்வித்துக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதேச மின் பொறியியலாளர்,
இலங்கை மின்சார சபை,
யாழ்.பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சார சபை

(சி-26986)

## விற்பனைக்கு

10 கோஸ்பவர் 2 சிலிண்டருடைய இங்கிலண்ட் லிஸ்ரர் எஞ்சின் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
கஜமுகன்
தொலைத் தொடர்பகம்,
வரணி வடக்கு. (15635)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி, தலைகால்
அவியல், சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல், மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
சி.இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 223 2459 (1538)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. P.மகேந்திரன்
(கிராம அலுவலர், நீர்வேலி மேற்கு J/270)

அவர்கள் கிராம அலுவலர் தரம் I இற்குப் பதவியுயர்வு பெற்றுள்ளமையை அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

கடமையுணர்வுடன் சேவைசெய்து எம் கிராம மக்களின் பேரன்பைப் பெற்ற மக்கள் தொண்டன் மகேந்திரன் அவர்கள் பல்லாண்டு காலம் வாழ்ந்து மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று பணி தொடரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நீர்வேலி மேற்கு. (15641) நீர்வேலி மேற்கு மக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
செல்வி பாமதி பொன்னுச்சாமி
அவர்களின் பாசமிகு தந்தையாரான
### வயிரவிப்பிள்ளை பொன்னுச்சாமி

அவர்களின் மரணம் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வடமராட்சி கிழக்கு
உதவி அரசாங்க அதிபர் பணிமனை
உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்.
மருதங்கேணி.

(C/26987)

## உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 36**

நாளை (18-03-2003) நடைபெறும் ஆஸ்திரேலியா - இலங்கை அணிகளுக்கிடையிலான அரையிறுதி ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

முழுப்பெயர் : ..............................
முகவரி : ..............................
அ. அட்டை எண்: ..............................

இக்கேள்விக்கான விடையை இந்த கூப்பனில் எழுதி நாளை (18.03.2003) நண்பகல் 12 மணிக்குள் தினம் ஒரு பரிசு - 36, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

'அருண்ஸ்' பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்




**தினம் தினம் ஒரு பரிசு:**
ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000 ரூபாவுக்கான 10 கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**
முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட். வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**
இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**
ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

# ஆறாவது சுற்றில் ஆறுமா சினம்?

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ஆறாவது சுற்று சமாதானப் பேச்சு எதிர்பார்க்கப்பட்டபடி ஜப்பானின் ஹக்கோனி நகரில் ஹக்கோனி பிரின்ஸ் ஹோட்டலில் நாளை ஆரம்பமாகின்றது.

ஐந்தாவது சுற்றுப் பேச்சுக்கும் ஆறாவது சுற்றுப் பேச்சுக்கும் இடையில் நடந்த சம்பவங்கள் தற்போதைய சமாதான முயற்சிகளில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரிந்ததே.

ஆறாவது சுற்றுப் பேச்சு நடப்பதே சந்தேகம் என்ற நிலையைத் தோற்றுவிக்கும் அளவுக்கு மோசமான நெருக்கடியை கிழக்கு ஆழ்கடலில் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவத்தினால் கடுஞ்சீற்றத்துக்கு உள்ளான புலிகளின் தலைமை, பொறுமை காத்து, பேச்சு மேசைக்குச் சென்று, அமைதிப் பேச்சைத் தொடர முடிவுசெய்தது. பொறுப்புணர்வோடும் மக்கள் விருப்பத்துக்கு மதிப்புக் கொடுத்தும் புலிகளின் தலைமை நடந்துகொள்ள முன்வந்ததால் அமைதி முயற்சிகளின் உயிர்மூச்சு நின்றுவிடாமல் தொடர்கின்றது.

நாளை தொடங்கும் பேச்சில் முக்கிய மாக மூன்று விடயங்கள் ஆராயப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

☆ யுத்தநிறுத்த சமயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் பாதுகாப்பு மற்றும் கடற்படையினரின் மோசமான யுத்த நிறுத்த மீறல் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துதல்.

☆ வடக்கில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் அந்த விடயம் தொடர்பாக இந்திய முன்னாள் இராணுவ அதிகாரி சதீஷ் நம்பியாரின் நிபுணத்துவ அறிக்கை.

☆ வடக்கு - கிழக்கு மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள்.

இவையே இந்தச் சுற்றுப் பேச்சில் முக்கிய அம்சங்களாக ஆராயப்படப்போகின்றன.

ஆழ்கடலில் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்தால் சீற்றமுற்றிருக்கும் புலிகளின் கோபத்தைத் தணிக்கும் முயற்சியிலும் அரசுத் தரப்புப் பிரதிநிதிகளும் நோர்வே அனுசரணையாளர்களும் ஈடுபடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆழ்கடல் கப்பல் தகர்ப்புச் சம்பவத்தால் எழுந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட்டால்தான் ஆறாவது சுற்றுப்பேச்சின்போது ஏனைய விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான வாய்ப்புக்கள் கிட்டும் என்பது தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் கப்பல் தகர்க்கப்பட்ட சம்பவத்துக்கு தீர்வு காணப்படவேண்டுமானால் அச்சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழுவினரின் முடிவு - தீர்ப்பு - வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அங்கொன்றும் இங்கொன்றுமாக சில கருத்துக்களை - தகவல்களை - கண்காணிப்புக்குழு கசியவிட்டுள்ளதே தவிர, தீர்க்கமான - திட்டவட்டமான - முடிவு எதையும் அது இன்னமும் உத்தியோகபூர்வமாக வெளியிட வில்லை.

இத்தகைய மோசமான ஒரு சம்பவம் குறித்து ஒரே நாளில் அல்லது ஒரு வாரத்தில் தீர்ப்புச் சொல்லிவிடலாம் என்பதோ, இறுதி அறிக்கையைப் பூர்த்தி செய்துவிடலாம் என்பதோ சாத்தியமற்றதாக இருக்கக்கூடும்.

என்றாலும், நோர்வே அனுசரணையாளர்களின் முன்னிலையில் இருதரப்பினதும் உயர்மட்டப் பிரதிநிதிகள் நேரடியாகச் சந்திக்கும்போது, அங்கு கண்காணிப்புக்குழுவினரின் இறுதி அறிக்கையும் முன்வைக்கப்படுமானால் பிரச்சினைக்கு உரிய தீர்வை சுமுகமாக - விரைவாக - காண்பதற்கு அது உதவக்கூடும்.

எனவே, ஆறாவது சுற்றுப் பேச்சில் இவ்விடயம் குறித்து தீர்க்கமான முடிவு எடுப்பதற்கு வசதியாக தனது அறிக்கையை கண்காணிப்புக்குழு விரைந்து முன்வைப்பதே நல்லது.

தனது முடிவை அறிவிக்காமல் கண்காணிப்புக் குழு காலத்தை இழுத்தடித்துச் செல்லுமானால் அது வீண் குழப்பத்திற்கே வழிசெய்யும்.

வலி.வடக்கு பிரதேசத்தில்

# ஆறு கிராம அலுவலர்களுக்கு 28 பிரிவுகளில் பதில் கடமை

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றுகின்ற ஆறு கிராம அலுவலர்கள் 28 கிராம அலுவலர் பிரிவுகளுக்கு பதில் கடமையாற்றும்படி உதவிப் பிரதேச செயலரினால் பணிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஏற்கனவே இங்கு கடமையாற்றிய கிராம அலுவலர்கள் 9 பேர் யாழ்.செயலகத்தினால் உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இடப்பெயர்வைத் தொடர்ந்து ஐந்து கிராம அலுவலர்கள் நல்லூர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் 96 ஆம் ஆண்டிலிருந்து கடமையாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி மக்களின் அடிப்படை சேவைகளுக்கான உத்தியோகத்தர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதையிட்டு வலி.வடக்கில் உள்ள பொது அமைப்புக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

புதிய கிராம அலுவலர்களை கிராம அலுவலர்கள் இல்லாத இடங்களுக்கு நியமனம் செய்ய நடவடிக்கையெடுப்பதை விடுத்து இருந்த கிராம அலுவலர்களை இடமாற்றம் செய்தமை இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்துவதாக அமைவதாகவும் மக்கள் கூறுகின்றனர். (ஒ-86)

## மாதர் மான்மியம்

### இது தகுமா?

சிறப்புறு வீடு வாசல்
செந்நெல் விளையும் பூமி
பொறுப்பற்று இவற்றை விட்டு
போயினை மேலை நாடு
பெறுமதி இவற்றுக்கு இப்போ
பெருகிற்று மும் மடங்காய்
அறிந்ததும் அங்கிருந்த வாறு
அனுப்பினாய் 'அற்றோணி' தத்துவத்தை
பெறுபவன் கொட்டன் பொல்லு
போத்தலும் கையுமாய் வந்து
வறுமையோடு வாழ்பவனை இங்கு
விரட்டியே கலைக்கின்றானே!

- விகடகவி

சர்வதேச கடற்பரப்பில்

# கப்பல் தாக்கப்பட்டது குறித்து புலிகள் வழக்குத் தொடரமுடியும்

## சட்டவல்லுநர்கள் தெரிவிப்பு

கொழும்பு,மார்ச்17

விடுதலைப் புலிகளின் கப்பல் சர்வதேச கடற்பரப்பில் வைத்துத் தாக்கப்பட்டமை தொடர்பாக புலிகள் இலங்கை உயர்நீதி மன்றத்தில் அல்லது லண்டனிலுள்ள சர்வதேச கடற்பிராந்திய ஆணைக்குழுவில் அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரமுடியும் என்று சட்டவல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

புலிகளின் வர்த்தகக் கப்பல் முல்லைத்தீவு கடற்பரப்பில் அன்றி இந்துமகா சமுத்திரத்திலுள்ள சர்வதேச கடற்பரப்பிலேயே தாக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட இடம் 125 மைல்களுக்கு அப்பால் என்று இலங்கைக் கடற்படையே ஒப்புக்கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில் நோக்கும்போது கடற்படையினர் சர்வதேச கடற்சட்டத்தை மீறியிருக்கின்றனர். ஐ.நா. சபையில் கடற்சட்டத்தைப் பேணுவதற்காக குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அது குறித்து இலங்கை உட்பட சகல நாடுகளுக்கும் ஐ.நாவால் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

எனவேதான், விடுதலைப் புலிகள் தமது கப்பல் தாக்கப்பட்டமை தொடர்பாக இலங்கை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரமுடியும். அல்லது லண்டனிலுள்ள சர்வதேச கடற்பிராந்திய ஆணைக்குழுவில் அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரமுடியும்.

வேண்டுமானால் இலங்கைத் துறைமுகத்திலுள்ள துறைமுகக் கப்பல் பாதுகாப்புப் பிரிவிற்கு புலிகள் முறையிட்டு நியாயம் கோரலாம்.

1993ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னையிலிருந்து 180 மைல்களுக்கு அப்பால் கேணல் கிட்டு பயணஞ்செய்த கப்பலை இந்திய கடற்படையினர் தமது கடற்பரப்பிற்குள் இழுத்துவந்தனர். இதனால் கப்பல் தீயிட்டு எரியூட்டப்பட்டது.

இதனை இந்திய உச்ச நீதிமன்றம் வன்மையாகக் கண்டித்திருந்தது. சர்வதேச கடற்சட்டத்தையும் இந்திய கடற்சட்டத்தையும் இந்திய கடற்படை மீறியுள்ளது எனவும் இந்திய உச்ச நீதிமன்றம் குற்றஞ்சாட்டியிருந்தது.

முக்கியமான பொருளாதார அபிவிருத்தி நோக்கங்களுக்காக மாத்திரமே சர்வதேச கடற்பரப்பை நாடுகள் பயன்படுத்த முடியும். அத்துடன் எதிரியின் கப்பல் சர்வதேச பொருளாதார கடற்பிராந்தியத்தில் நடமாடினால்கூட அதனை எந்த நாட்டுக் கடற்படையாலும் தடுத்து நிறுத்தமுடியாது.

அதேவேளை - சர்வதேச கடற்பரப்பில் பயணஞ்செய்யும் கப்பலில் கொடி இருக்கின்றதா? சின்னம் இருக்கின்றதா? என்று பார்க்கவேண்டிய அவசியம் இல்லை.

இலங்கையின் கடற்படைக்கு அத்தகைய தேவை இருந்திருக்குமானால் அது கண்காணிப்புக்குழுவுடன் போயிருக்க வேண்டும்.

- இவ்வாறு சட்டவல்லுநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# படையினரின் கெடுபிடிகள் தொடர்ந்தால் புலிகள் பொறுமை காக்கமாட்டார்கள்!

## நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்17

படையினரின் கெடுபிடிகள் அதிகரித்தபோதிலும் புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

எனவே, இவ்வாறு கெடுபிடிகளைத் தொடர்ந்துகொண்டு புலிகள் மீண்டும் மீண்டும் பொறுமையைக் கடைப் பிடிப்பார்கள் என எண்ணினால் அது வெறும் மடைமைத்தனமே. இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழு. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் ஒன்றிலேயே மேற்படி ஆணைக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

10.03.2003 அன்று இலங்கைக் கடற்படையினரால் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டமை தொடர்பாக எமது பலத்த கண்டனத்தைத் தெரிவிக்கின்றோம்.

யுத்த சூழலிலும் நீதி, சமாதான இலட்சியத்தை முனைப்புடன் முன்னெடுத்துவரும் அமைப்பு என்றவகையில், மேற்படி விடயம்பற்றி எமது கருத்தைத் தெரிவிக்க எமக்கு கடமையும் உரிமையும் உண்டு என நம்புகிறோம்.

கடந்த மாதம் பெண் விடுதலைப் போராளிகள் மீதும் நெடுந்தீவுக் கடலில் கடற்புலிகள் மீதும் பாதுகாப்புப் படையினர் ஆத்திரமூட்டும் வகையில் தாக்குதல் நடத்தியபோது, விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப்பிடித்தனர்.

இப்போது, கேவலமான முறையில் மூன்றாவது தடவையாகவும் தாக்குதல் நடந்துள்ளது. இதன் பின்னரும், இத்தகைய சம்பவம் நடப்பின், விடுதலைப் புலிகள் பொறுமையைக் கடைப்பிடிப்பார்களென்று எதிர்பார்த்தால் அது மடைமையாயிருக்கும்.

சம்பந்தப்பட்ட படை அதிகாரிகளோ, அரசியல் தலைவர்களோ கடந்தகால அனுபவங்களிலிருந்து, குறிப்பாக தச்சவாலை போன்ற அனுபவங்களிலிருந்து பாடம் படித்துள்ளதாகத் தெரியவில்லை.

இத்தாக்குதல் நிகழ்ந்த இடம்பற்றி முன்னுக்குப்பின் முரணான தகவல்கள் விடுக்கப்பட்டதிலிருந்தே உண்மை எதுவென்று விளங்குகிறது.

வட பகுதியிலுள்ள கடற்படைக் கட்டளை அதிகாரிகளை நாம் பார்க்கும்போது, விடுதலைப் புலிகளின கப்பலைத் தாக்கி அழிப்பதற்கான உத்தரவு அவர்களிடமிருந்து பிறந்ததென்று கூறமுடியாது. மாறாக, சமாதானப் பேச்சுக்களை தடம் புரள வைக்க விரும்பும் தென்பகுதி அதிகாரி ஒருவரிடமிருந்தே அந்தக் கட்டளை பிறந்திருக்க வேண்டும்.

எனவே, இத்தகைய ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடாதபடி பாதுகாப்புப் படையினரை கட்டுப்பாட்டில் வைக்கும்படியும், மேற்படி தாக்குதலைக் கட்டளையிட்ட பொறுப்பதிகாரியை இனங்கண்பதற்கான நடவடிக்கையை எடுக்கும்படியும் தங்களைப் பணிவுடன் கோருகின்றோம். - என்று அதில் உள்ளது. (எ)

### நாளை

பங்குனி 04
செவ்வாய்க்கிழமை
(18.03.2003)
திதி : பூரணை
பிற்பகல் 5.04வரை.
நட்சத்திரம்: உத்தரம்
பின்னிரவு 3.54 வரை.
பூரணை விரதம்
பங்குனி உத்தரநன்னாள்
சுபநேரம்: 10.49 - 12.19
ராகுகாலம்: 3.19 - 4.49
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

தான் சொல்வதை பிறர் நம்புவதாக நம்புகிறவனின் ஏமாற்றம் நம்பமுடியாத அளவு பெரிதாக இருக்கும்.

## வண்ணையிலே வடம்பிடித்து இடம்பிடிப்போம் முத்தியிலே!

வண்ணைச் சிவன் விழாக்கண்டு
யாழ்நகரம் பொலிவுபெறும்
பஞ்சரதப் பவனிகண்டால்
பாவமெல்லாம் கரைந்துபோகும்
ஆனைமுகன் ஏறிவரும்
அழகுரதம் முன்னே வரும்
வாலாம்பிகை அம்மை தேரைப்
பெண்ணடியார் சேர்ந்திழுப்பர்
ஆறுமுக சுவாமி தேரில்
வள்ளிதெய்வ யானை வர
விண்ணை முட்டும் தேரில் சிவன்
தேவியுடன் ஆடிவர
எண்ணமெல்லாம் உயர்வுபெற
கண்ணிறைந்த காட்சி காண்போம்
வடம்பிடித்தே இழுத்திடுவோம்
இடம்பிடிப்போம் முத்தியிலே.

- கவிமணி கந்த முருகேசதாசனார்.

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேர்த்திருவிழா இன்று.

# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தான
17-03-2

## மஹோற்சவ பிரதம குருக்களின் ஆசி

வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் '2003ஆம் வருட வருடாந்த மஹோற்சவத்தில் இன்று ரதோற்சவம். கொடிய வினை நீக்கி, நெடிய பகை போக்கி, வழிபடும் அடியார்களின் வல்வினை களைந்து, தேவாதி தேவனாக மிளிரும் ஐயன் சிவன் இன்று தேரேறி வந்து இன்னருள் புரிகின்றான்.

பிறவிப் பிணி தீர்க்கும் மருந்தாக விளங்கும் சிவபெருமானானவர் நமக்கு வருகின்ற, வந்த, வரப்போகின்ற சகல நோய்களையும் மாற்றி அருள்புரிகின்றார்.

இந்த மஹோற்சவத்தில் பங்குகொண்டு எம்பெருமானைத் தரிசித்து வழிபடும் அடியவர்களுக்கு எல்லாவிதமான ஐசுவரியங்களையும் வழங்க வேண்டுமென்று ஆசி கூறி வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகின்றேன். இந்தச் சிறப்பு மலரில் ஆசி வழங்கும் வாய்ப்பு கிடைத்தமைக்கு எம்பெருமானைப் பணிந்து வழுத்தி விடைபெறுகின்றேன்.

ஓம் சாந்தி.

*ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்,* சிவஸ்ரீ மு.விஜயகாந்தக் குருக்கள்.
*யாழ்ப்பாணம்.*


## ஆலய அறங்காவலரின் ஆசி

தொன்மைவாய்ந்த திருத்தலமான வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் தேர்த்திருவிழா சிறப்பு மலரில் ஆசி வழங்கும் வாய்ப்புக் கிடைத்தமையையிட்டு மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். போற்றித் துதித்து ஏற்றி நிற்கும் அடியவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் சுபீட்சமும் துலங்க எம்பெருமன் அருள்புரிய வேண்டுமென்று எல்லாம்வல்ல வைத்தீஸ்வரப் பெருமானின் பாதகமலங்களைப் பணிந்து பிரார்த்தித்து ஆசி கூறுகின்றோம்.

பஞ்சரதங்களில் பவனிவரும் பெருமான் தஞ்சமென்று வரும் அடியார் திருக்கூட்டத்தினருக்கு அருள்புரிய வேண்டுமென்று அவனருளையே வேண்டிப் பிரார்த்தித்து வணங்கித் துதிக்கின்றோம்.

- ஆலய அறங்காவலர்.

## வல்வினை போ... நல்விழாப் ...



வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இன்று ரதோற்சவம். பஞ்சரதங்களில் பஞ்சமூர்த்திகள் எழுந்தருளி வரும் இனிய காட்சி காணக் கண் கோடி வேண்டும். வருடாந்த மஹோற்சவத்தில் தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். நாம் செய்த பாவங்களையெல்லாம் ஒழித்தருளி திருவருளோடு சம்கமமாகும் செம்வீகத் திருநாள் இதுவாகும். திருவருட்பொலிவான நாள்.

**கண் கொள்ளாக் காட்சி**

அடியார்கள் எல்லோரும் ஒருங்கே கூடி "அரோஹரா" கோஷத்துடன் இந்து திருத்தேர்களையும் இறைபக்தியுணர்வுடனே இழுத்துவருங் கண்கொள்ளாக் காட்சி அருள்மயமானது. ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் வாலாம்பிகை அம்பாள் சமேதரராக நடுவே பாலமுருகன் சுப்பிரமணியப்பெருமானுடன் சோமாஸ்கந்தராக எழுந்தருளி வீற்றிருந்து வீதிவலம் வருங் காட்சி மிகவும் ரம்மியமானது.

**வரலாற்றுச் சிறப்பு**

தஞ்சை அரச பீடத்தை அலங்கரித்து ஆட்சியிலிருந்த மஹாராஷ்டிர மன்னன் சத்திரபதி பிரதாப்சிங் மகாராசாவின் அரச கட்டளை பெற்று சிற்ப சாஸ்திரத்திலும் கட்டடக்கலையிலும் விற்பன்னரான ஸ்ரீ க... திருப்பணி வேலைகளுக்காக வைத்திலிங்கச் செட்டிய... வழைத்து ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெரு... ததாக வரலாறு பகர்கின்றது.

ஒல்லாந்தர் ஆட்சியில் இறுதியாகப் பதவி வகித்த ... வைத்திலிங்கச் செட்டியார். இவர் 1790அம் ஆண்டு...

செட்டியாரின் குல குருவான கூழங்கைத் தம்... செட்டியாருக்கு நல்லாசானாய் அமைந்ததோடு அவ... வாணிபஞ்செய்து பெருஞ் செல்வந்தராக வாழ வழி அ...

வைத்திலிங்கச் செட்டியாரின் குல முன்னோர் திருவா... சிவன் கோயிலைப் பரிபாலித்து வந்தவர்கள்.

விமானக் குண்டுவீச்சுக்கு இலக்காகி சேதமடைந்த இ...

## நல்லை ஆதீன முதல்...

தம்மை வழிபடும் அடியார்களின் வல்வினை... வைத்தியநாதராக விளங்கும் யாழ்ப்பாணம் வ... பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானின் தே... பெறுவதையிட்டு பேருவகையடைகின்றோம்.

தீராத நோய் தீர்த்தருளும் பேரானாக வி... தடங்கடலாகப் பொலியும் சிவபெருமான் இன்று ... திருத்தேரில் ஆரோகணித்து திருவீதி வலம் வ...

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் முதல் நல்லைக்குரு... செய்த திருவருள் சிறக்கும் திருமிகு ஆலயம் இ...

பஞ்சரதங்களிலும் பஞ்சமூர்த்திகள் எழுந்... அருட்காட்சி நல்கும் தேர்த்திருவிழா பக்திப் ப... மானின் அடியார்கள் அனைவரும் இன்னல்கள், ... கள, துயரங்கள் விலகி மகிழ்ச்சியோடும் மன நி... வில் சபீட்சம் காணவேண்டுமென்று உளமாரப் பிர...கின்றோம்.

ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் பாதகமலங்... நீக்கம் பெற்று அனைவரும் சுகவாழ்வு வாழ ...

'என்றும் வேண்டும் இன்...

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்...

*- இரண்டாவ...*

*நல்லை ஆ...*


அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும்

**காவேரி சில்க்ஸ்**

(கல்யாணப் பட்டுப் புடைவைகளின்
கைராசி நிறுவனம்)
இல.48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2333 (C\26889)

அழகுக்கு அழகு செய்யும் அழகிய அலங்கார
அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு
நம்பிக்கையான ஸ்தாபனம்:

**அலங்கார் நகைமாளிகை**

இல.21/7, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 - 2920 (C/26953)

**மற்றா தளபாட நிலையம்**

இற்றைநாள் வரை
இல.137, கஸ்தூரியார் வீதியில்
இயங்கிவந்த எமது தளபாட நிலையமானது
தற்போது இடம் மாற்றப்பட்டு
இல.395, 233, காங்கேசன்துறை வீதியில்
இயங்குகின்றது என்பதை அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.
- குசன் செற்றிகள்
- கட்டில்கள்
- அலுமாரிகள்
- பிளாஸ்ரிக் கதிரைகள்
- மற்றெஸ்

ஆகியவற்றுக்கு நீங்கள் நம்பிக்கையோடு
நாடவேண்டிய இடம்:

**மற்றா தளபாட நிலையம்**

குசன் செற்றிகள் திருத்தஞ்செய்து
மீள் குசன் அமைத்துக் கொடுக்கப்படும்.
(C/26964)

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
- துல்லியமாகவும்
- துரிதமாகவும்
- குறைந்த கட்டணத்தில்

கொம்பியூட்டர் மூலம்

**INTERNETஇல்**

தொடர்புகொள்ள:

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**

இலங்கை முழுவதும் .24 மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
மேலும் விவரங்களுக்கு:
**SRI MURUGAN**
**TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. 021-222 2670, 222 3588 FAX : 222 3214
E-MAIL : del-smskr@eureka.lk
(C/26894)

பலசரக்கு மற்றும் மிக்ஷர் தயாரிக்கும்
பொருள்கள் மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**ஜெகன் களஞ்சியம்**

இல.285, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
☎ 222 5035 (C/26887)

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**

திருமண சாறிவகைகளின்
விசேட விற்பனையாளர்களும்,
ஜவுளி மொத்த, சில்லறை விற்பனையாளர்களும்.
41, பெரியகடை, யாழ்ப்பாணம்,
சிறீலங்கா.
தொ.பே.இல: 222 2063 (C/26890)

சுகாதார முறைப்படி, நாவினிக்கும்
வகையில் தரமான, சுவையான
பண்டங்களைத் தயாரித்து
என்றென்றும் தந்திடும்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/26896)

புத்தம் புதிய டிசைன்களி...
பாணியிலமைந்த ஆடைத்...
நாடுங்கள்:

**மகாநு... புடைவை...**

16, நவீன சந்தை, யா...
சாறி, பிளவுஸ்பீஸ் வகை...
பிரத்தியேகக் காட்...
16, நவீனசந்தை(...
யாழ்ப்பாண...
இல. 04, நவீனச...
சாவகச்சேரி...
(C/26807)

சிமயம்

# ன ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத

# ன இரதோற்சவ சிறப்பு மலர்

# 3-2003



## ன போக்கும் வைத்தீஸ்வரப் பெருமான் ோப் பொலிவு கண்டு ஆனந்திப்போம்!



ண ஸ்ரீ வைத் ற்சவம். பஞ்ச வரும் இனிய ம். வருடாந்த அழித்தலைக் யல்லாம் ஒழித் னுவீகத் திரு ான நாள்.

ட்சி

கூடி "அரோ த்தேர்களையும் ங் கண்கொள் வைத்தீஸ்வரப் தரராக நடுவே டன் சோமாஸ் திவலம் வருங்

த்து ஆட்சியிலி பதி பிரதாப்சிங் று சிற்ப சாஸ் பன்னரான ஸ்ரீ கண்ணாயிர ஸ்தபதியார் மூலமாக திலிங்கச் செட்டியார் அவர்கள் ஈழநாட்டுக்கு வர வத்தீஸ்வரப் பெருமானின் ஆலயத்தை அமைப்பித்

கப் பதவி வகித்த தேசாதிபதியின் வளர்ப்பு மகனே 790ஆம் ஆண்டு இக்கோயிலைக் கட்டுவித்தார். கூழங்கைத் தம்பிரான் என்னும் பெரும் புலவர் மந்ததோடு அவரை நல்ல நெறியில் வழிப்படுத்தி ராக வாழ வழி அமைத்துக்கொடுத்தார். முன்னோர் திருவொருரைச் சேர்ந்தவர்கள். இவர்களே வர்கள்.

கி சேதமடைந்த இந்த ஆலயமானது 26.11.2001 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 27.01.2002 இல் மஹாகும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆலயம் மூன்று சுற்றுப்பிரகாரங்களை உடையது. இரண்டாம் வீதியில் சித்தாமிர்த புஷ்கரணியான தீர்த்தக் கேணி அமைந்துள்ளது. பல வருடங்களாக சிறப்பான பூசைகள் நடைபெற்று அருட்பொலிவோடு விளங்குகின்ற இந்த ஆலயத்தை கோபாலச் செட்டியார், கந்தப்பச் செட்டியார், பொன்னுச்சாமிச் செட்டியார், வைத்திலிங்கச் செட்டியார் எனும் செட்டியார் பரம்பரையினர் பரிபாலனஞ் செய்து வந்தனர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமைந்த கீர்த்திமிக்க இந்த ஆலயம் யாழ்ப்பாணத்தில் வண்ணார்பண்ணையில் நடு நாயகமாக அமைந்துள்ளது.

### பிரசாங்கம் நடந்த ஆலயம்

சைவத்தையும் தமிழையும் தமது கண்களெனப் போற்றி வளர்த்த சைவக்காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தமது முதற் பிரசங்கத்தை இந்த ஆலயத்திலேயே செய்தார். அவர்களுக்குப் பின் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளையும் சங்கரசுப்பையரும் பிரசங்கம் செய்துள்ளனர். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்தாபகரான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளும் இங்கேயே தமது பிரசங்கங்களைச் செய்து சைவம் வளர்த்தார்.

ஈழத்துச் சைவசமய வரலாற்றில் சிறப்புமிகு ஆலயமாக மிளிரும் வைத்தீஸ்வரன் ஆலயம் சிவாகம முறைப்படி அமைந்து துலங்குகின்றது.

### வலம் வரும் காட்சி

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதற்கிணங்க ஸ்தூலலிங்கம் எனப்படும் இராஜகோபுரம் வானளாவ உயர்ந்து நின்று அழகுக்கு அழகூட்டுகின்றது. பக்தர் குழாம் பக்திப் பரவசத்துடன் 'அரோஹரா' கோஷம் முழங்க பஞ்சரதங்களையும் பயபக்தியோடு வீதி வழியாக இழுத்து வரும் காட்சி அருள் மயமானது. விநாயகப் பெருமான் முன்னே வர சுப்பிரமணியப் பெருமான், தையல்நாயகி, சண்டேஸ்வரர் சகிதமாக ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான் தேரேறி ஆரோகணித்து வருகின்றார். ஆலயத் திருவீதி வலம் வந்த பின்னர் பச்சைசாத்தி தேரிலிருந்து அவரோகணமாகி அடியார்களுக்கு அருள் வழங்கும் காட்சி காணக் கண்கோடி வேண்டும்.

- சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரன்.

## முதல்வரின் அருளாசி

ளின் வல்வினை போக்கி நல்லருள் புரியும் ாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வாலாம் பெருமானின் தேர்த்திருவிழா இன்று நடை டகின்றோம்.

பேராளனாக விளங்குகின்ற பரங்கருணைத் ருமான் இன்று ஸ்ரீ சோமஸ்கந்த மூர்த்தமாக நவீதி வலம் வருங்காட்சி அற்புதமானது. ல் நல்லைக்குருமணி ஈறாக கதாப்பிரசங்கம் மிகு ஆலயமும் இதுவாகும்.

த்திகள் எழுந்தருளிவந்து பக்தர்களுக்கு விழா பக்திப் பரவசம் நிறைந்தது. எம்பெரு இன்னல்கள், இடுக்கண்கள் நீங்கி துன்பங் யோடும் மன நிம்மதியோடும் சமாதான வாழ் உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்கு

ின் பாதகமலங்களைப் பணிந்து பாதக மல வாழ்வு வாழ வேண்டுகின்றோம்.

வேண்டும் இன்ப அன்பு'

ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

- இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.


சைன்களிலான நவீன
ஆடைத் தெரிவுக்கு
டுங்கள்!

ாநதி
வயகம்

தை, யாழ்ப்பாணம்.
ஸ் வகைகளுக்கான
க் காட்சியறை
தை(மேல்மாடி)
ாணம்.
நவீனசந்தை,
கச்சேரி.

சகல விதமான அதிநவீன டிசைன்களுக்கு
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:
த. சங்கரப்பிள்ளையும்
மைந்தர்களும்
21, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2826
(C-20892)

நல்லெண்ணெய் உற்பத்தி, விற்பனையில் முன்னோடிகள்
V.S.P
குடும்பப் பெண்களின்
சிக்கன வாழ்க்கைக்கும்,
சிறந்த உணவுத் தயாரிப்புகளுக்கும்.....
V.S.P லஞ் ஒயில் V.S.P
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 2785
கொழும்பில்:-
மயூரா கொம்மினிக் கேசன்
36B, பரக்கும்பா பிளேஸ், கொழும்பு - 6
T.P.: 596226, 074 516049
074 512034
(C/26932)

எத்தனை இனம்? MAKE
HERO HONDA World No. 1 Two-Wheeler Company
எத்தனை வகை? MODEL.
கண்ணைக் கவரும் கவர்ச்சிமிக்க புத்தம் புதிய
மோட்டார் சைக்கிள் வகைகள்
உத்தரவாதத்துடன் விற்பனைக்கும் பிந்திய
சேவையுடன் பதிவுசெய்து பெற்றுக்கொள்ள
RG
இரத்தின கோர்பரேஸ்
63, 65, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
(C/26955)

மங்கையர் மனம் கொள்ளைகொள்ளும் தங்க
நகைகளை குறிப்பிட்ட தவணையில் தரமாகவும்,
நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:
சிவமகாலட்சுமி நகை அகம்
(ராஜா தியேட்டர் முன்பாக)
176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ஓம் முருகன் நகை மாடம்
இல.5, கைதடிச் சந்தி, கைதடி.
(C26933)

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
ஜவுளி விற்பனையில்
மொத்த, சில்லறை வியாபாரிகள்.
72(9), பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P.: 021 2151
(C26888)

உலகப் புகழ் பெற்ற L.G
இலத்திரனியல் பொருள்களை
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட







யாழ்ப்பாண மின்னகம்
காட்சியறை
141, மணிக்கூட்டு வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
6(94), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. NO: 222 2353
(C26895)

ஸ்க்றீன் பிறிண்டிங்
ஓ(F)வ் செற்
பிறிண்டிங்,
பிளாஸ்ரிக் போட்
திருமண அழைப்பிதழ்கள்,
கீரெக், துணி பிறின்ரிங்,
கலண்டர் பிறின்ரிங் என்பன மிக
நவீன முறையில் கொம்பியூட்டர் மூலம்
அழகுற வடிவமைத்துப்
பெற்றுக்கொள்ள யாழ்.நகரில்
தாரணி பதிப்பகம் & ஆட்ஸ்
இல.319, கே.கே.எஸ்.வீதி,
(மனோகரா தியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.
கிளை:
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.
பதிப்பு வேலைகளின்
தரணி புகழ் ஸ்தாபனம் தாரணி பதிப்பகம்
(C/26891)

உ

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

பண்ணாகம் ஸ்ரீ முருகன் இந்து சமய விருத்திச் சங்கத்தின் ஆதரவில் வெளியிடப்படும்

# பண்ணாகம் விசுவத்தனை முருகமூர்த்தி கோயில்


# தேர்த் திருவிழாச் சிறப்புமலர்

# 17-03-2003

## சித்திரத் தேரேறும் விசுவத்தனை முருகனை - காண ஆயிரம் கண் வேண்டும்!

முருகன் அடியார்களே!

யாழ்ப்பாணத்தில் இருந்து காரைநகர் செல்லும் வழியில் 14 ஆவது கி.மீ.இல் அமைந்துள்ள அழகிய கிராமமாம் பண்ணாகத்தில் எழில்மிகு சோலைகள் நிறைந்த வயற்கரை ஓரத்தில் அமைந்துள்ள விசுவத்தனை பதிக்கு வாருங்கள். வந்து வேண்டும் பேறுகளைப் பெற்று உய்யுங்கள். வேண்டுவது எல்லாம் தருபவர் நம் முருகப் பெருமான். ஆறுபடை வீடுகளில் ஒன்றாகிய பழமுதிர்ச்சோலைபோல் விளங்குவது பண்ணாகம் விசுவத்தனைப்பதி. இயற்கை எழில் நிறைந்த சூழலையும் சகல நிறைவுகளையும் கொண்டு திகழ்கின்றது. இந்த ஆலயத்தில் அழகு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.



தினமும் நேரம் தவறாது மூன்று காலப்பூசையின் போதும் விசேட தினங்களிலும் மக்கள் திரள்திரளாகத் திரண்டு வந்து வழிபாடு செய்வார்கள். தற்போது ஆலயத்தின் பிரதம அந்தணச் சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ ச.பாஸ்கரரவிக் குருக்கள் முருகப் பெருமானுக்குச் செய்து வரும் பூசை, ஆராதனைகள் யாவும் மக்கள் உள்ளத்தை நெகிழ வைப்பதாகவுள்ளன.

ஆலய பரிபாலன சபையார் மக்களின் உதவியோடு ஆலயத்தைச் சிறப்புடன் நிர்வகித்து வழிபாட்டுக்கு வேண்டிய கருமங்களைச் செய்து வருகின்றனர். மக்கள் நிறைவுடன் வழிபாடு செய்து அருள் பெற்று மகிழ்கின்றனர்.

கலியுகத்தில் உள்ள அதர்மச் செயல்களை வேரோடு களைவதற்கு வேல் கொண்டு வினை தீர்க்க வேலவன் தேரேறி வருகிறான். அவனை வடம்பிடித்து இழுப்போம் வாருங்கள். எங்கள் குலதெய்வம், எங்கள் அரிய செல்வம் எங்களைக் காத்திடுவதற்காக இந்த விசுவத்தனையை நாடி தாய்மாரே, பெரியோரே, தம்பியரே யாவரும் வாருங்கள் வடம்பிடித்திழுப்போம்.

மலர் ஆக்கம்: பண்ணாகம் இந்து சமய விருத்திச் சங்கமும், அறநெறிப் பாடசாலையும்.


*தேரேறும் எங்களூர் கந்தா! போரொழிந்த பூமி தன்னில் புலி மறவர் ஆட்சி தன்னை விரைவாய்த் தந்திடப்பா!*

இளைய சமூகத்தின் இன்றைய தெரிவு

**ஸ்ரீ விநாயகர் வீடியோ ஓடியோ & பிறின்ரேர்ஸ்**
வழக்கம்பரை, பண்ணாகம்.

**நவம்ஸ் தொலைத் தொடர்பகம்**
070-212355, 0094-70 212355 பிரதான வீதி, சுழிபுரம்.

**விதுஷா கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி, சங்கானை.

**கலியுகன் தொலைத் தொடர்பு நிலையம்**
070-212410, 021-222 5823 வழக்கம்பரை, சுழிபுரம்.

**கணேஸ் ஸ்ரோர்ஸ் பலசரக்கு மாளிக்கை,**
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**ஸ்ரீவரதராஜா வெதுப்பகம் & ஸ்ரீராம் அங்காடி**
தொல்புரம், வழக்கம்பரை.

**பாக்கியரத்தினம் ஹாட்வெயர்ஸ்**
பிரதான வீதி, சங்கானை.

**மயூரன் ஸ்ரோர்ஸ் பல்பொருள் வாணிபம்**
வழக்கம்பரை, சுழிபுரம்.

**குமரன் ஹாட்வெயர்ஸ்**
காரைநகர் வீதி, வழக்கம்பரை.


## பண்ணாகம் பொதுசன அமைப்புகள்:

அம்பாள் கலைமன்றம்
ஸ்ரீமுருகன் அன்னதான சபை
விசுவத்தனை எட்டாம் திருவிழாச்சபை
ஸ்ரீமுருகன் சனசமூக சேவா வாலிபர் சங்கம்
மக்கள் சிக்கன கடன் உதவி கூட்டுறவுச் சங்கம்
இளம் விவசாயிகள் கழகம்
மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்
ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம்
இளைஞர் கழகம்
ஐக்கியநாணய சங்கம்
விசுவத்தனை ஸ்ரீ முருகன் பரிபாலனசபை.


**அஜி தொலைத் தொடர்பகம்**
021-222-5271
070-21-2314
பிரதான வீதி, சுழிபுரம்.

**வரதலக்ஷ்மி வெதுப்பகம்**
காழுவன் சந்தி,
சுழிபுரம்.

**பேன் நியூ பசன் ஹவுஸ்**
பிரதான வீதி,
சங்கானை.

**நிறைஞ்சனாஸ் இரும்பகம்**
பிரதான வீதி,
சங்கானை.

**வரதாஸ் கிறீம் ஹவுஸ்**
பிரதான வீதி,
சங்கானை.

**ஸ்ரீபரன் தையல் அகம்**
பிரதான வீதி,
சங்கானை.

**நியூ ஸ்ரார் பார்மசி & புக் சொப்**
சித்தன்கேணி.

**கஜறாம்ஸ்**
**தொலைத் தொடர்பு நிலையம்**
070-213155
பிரதான வீதி, சித்தன்கேணி.

**கீர்த்தா அச்சகம்**
பிரதான வீதி,
சங்கானை.

**விநாயகர்**
**தொலைத் தொடர்பு நிலையம்**
021-5822, 070-212428
பிரதான வீதி, சித்தன்கேணி.

**லஷ்மன்**
**தொலைத் தொடர்பு சேவை**
070-212664
பிரதான வீதி, சித்தன்கேணி.

**விஜயகுமார்**
**பல்பொருள் வாணிபம்**
சந்தைச் சதுக்கம்,
சத்தியகாடு.

**தாசன் கல்வி நிறுவனம்**
பண்ணாகம்,
சுழிபுரம்.

**ஞா.சுரேஸ்குமார்**
சுழிபுரம் வடக்கு,
சுழிபுரம்.

(15604)

**சங்கானை பார்மசி**
பிரதான வீதி,
சங்கானை.

*இன்றைய அறிமுகம் நாளைய நாகரிகம்*
**திலகன் தையலகம்**
பிரதான வீதி,
சங்கானை.

**சோபிகா மெடிக்கல்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**சதானந்தன் கபே**
சந்தைச் சதுக்கம்,
சத்தியகாடு.

சமாதானம் நிலைகொண்டு
பார் உலகெங்கும் பூரணம் பொழிக.
**சச்சியா இரும்பகம்**
தெல்லிப்பழை வீதி,
வட்டுக்கோட்டை.

**கிருஷ்ணா பழ வாணிபம்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**கிருஸ்ணா பலசரக்கு வாணிபம்**
சந்தைச் சதுக்கம்,
சத்தியகாடு.

**அம்பாள் களஞ்சியம்**
வழக்கம்பரை,
சுழிபுரம்.

**ஈஸ்வரி பற்றி சாச்**
வழக்கம்பரை,
சுழிபுரம்.

**தேவி கிறைண்டிங் மில்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

**குணரத்தினம் ஸ்ரோர்ஸ்**
பண்ணாகம்.

**கிருஸ்ணா ஸ்ரோர்ஸ்**
**பலசரக்கு வாணிபம்**
பொன்னாலை வீதி,
பண்ணாகம்.

**கேமா களஞ்சியம்**
**பலசரக்கு வியாபாரம்**
பண்ணாகம்,
சுழிபுரம்.

**கேதீஸ் களஞ்சியம்**
பிரதான வீதி,
சுழிபுரம்.

# வாசகர் திருமுகம்

## உரிய நடவடிக்கைகளை செயலில் காட்டுங்கள்!

'அனுமதிபெறாது கட்டடங்களைக் கட்டுவோர் மீது நடவடிக்கை - பிரதேச சபைச் செயலாளர் எச்சரிக்கை' என்ற தலைப்பில் கடந்த 4ஆம் திகதிய உதயனில் ஒரு செய்தியைப் படித்தேன்.

ஒரே வியப்பாக இருக்கிறது. இப்படி ஓர் எச்சரிக்கையை பத்திரிகைக்கு அனுப்பி அதைப் பிரசுரித்துவிட்டால் பிரதேச சபையின் கடமை முடிந்துவிட்டது என்றா அர்த்தம்?

சட்டவிரோதமாக கட்டடங்களை அமைத்தோர், காணிக்குள் அத்துமீறி குடியிருப்போர், அடுத்தவரின் எல்லைக்குள் அத்துமீறி நுழைவோர் தொடர்பாக 1997இற்குப் பின்னர் எத்தனை முறைப்பாடுகள் செய்யப்பட்டன, அவற்றுக்கு சபை என்ன நடவடிக்கை எடுத்தது என்ற விவரத்தை செயலாளர் வெளியிடுவாரா?

பிரதேச சபையின் அங்கீகாரம் இல்லாமல் கட்டடங்கள் கட்டப்பட்டபோது காணி உரிமையாளர்கள் செய்த முறைப்பாடுகளுக்கு என்ன நடந்தது?

அவர்களுக்கு எதிராக ஏன் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை?

பிரதேச சபைச் செயலாளர் இதனைத் தெளிவுபடுத்தவேண்டும்.

ஏற்கனவே கட்டப்பட்ட கட்டடங்களைக் கட்டியவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுத்து அக்கட்டடங்களை உடைப்பதற்கு பிரதேச சபை செயலாளர் நடவடிக்கை எடுப்பாரா?

இதற்கான பதிலை பத்திரிகை வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*திருநெல்வேலி கிழக்கு.* **சிவராம்**

## ஏன் இந்தப் புறக்கணிப்பு?

வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை கடந்த 2000ஆம் ஆண்டில் ஆரம்பமான யுத்தம் காரணமாக சீர்குலைக்கப்பட்டு பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தது. மக்கள் மீள்குடியமர்வைத் தொடர்ந்து இப்பாடசாலை மீளவும் ஆரம்பிக்கப்பட்டு ஆலய மண்டபத்திலும் மரநிழல்களிலும் வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலையின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்ட அதிகாரிகள் உரையாற்றும் போது, பலவிதமான தேவைகளும் விரைவில் நிவர்த்தியாக்கப்படும் என உறுதியளித்துச் சென்றனர். ஆனால், ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் கட்டடம் அற்ற இப்பாடசாலைக்கு ஒரு தற்காலிக கொட்டகை தானும் அமைத்துத் தருவதாகத் தெரியவில்லை. உரிய அதிகாரிகளைக் கேட்கும்போதெல்லாம் கட்டாயம் அமைத்துத் தருவோம் என்று கூறுகின்றார்களே தவிர அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் எவையுமில்லை.

இதேவேளை, இப்பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள், தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் என்பவற்றை வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் கேட்டபொழுது, கட்டட வசதியற்ற இப்பாடசாலைக்கு உபகரணங்கள் வழங்க முடியாதென அதிகாரிகள் அறிவித்ததாக இப்பாடசாலையின் அதிபர் கூறியுள்ளார்.

இப்பாடசாலைக்குத் தற்காலிக கொட்டகை அமைப்பதற்கு ஏன் இந்தப் புறக்கணிப்பும் காலதாமதமும்? மனவேதனையுடன் கேட்கின்றார்கள் இப்பகுதி மக்கள். உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

*செம்பியன்பற்று.* **பா.றோ.மதுரநாயகம்.**

## சொந்த வீட்டில் இருக்க எமக்கு உரிமை இல்லையா?

இது என்னோடு தன் எண்ணத்தை வெளிப்படுத்திய ஒருவரின் வார்த்தைகள். மக்கள் வீடுகள் இல்லாது; இருக்க இடமில்லாது இருக்கிறார்கள்.

இராணுவத்தினர் எதுவித கவலையுமில்லாது தங்கள் நிலைகளை பலப்படுத்துவதில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

படை அதிகாரிகளுடனான சந்திப்பின்போது யாழ்.கடற்கரையிலுள்ள 125 வீடுகளைவிட்டு இராணுவம் உடனடியாக வெளியேறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தச் செய்தி பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

இவை சம்பந்தமாக எந்தவித செயற்பாடும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. வீடில்லாது அலைந்து திரியும் எமக்குத்தான் இதன் வேதனை புரியும்.

எங்களை எங்கள் சொந்த வீட்டில் வசிக்க ஆவனசெய்யுமாறு சம்பந்தப்பட்டவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

அத்தோடு, பல வீட்டுப் பொருள்களும் படையினரால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தயவுசெய்து அவற்றையும் திருப்பித் தருமாறு கோருகின்றேன்.

**- நலன் விரும்பி.**

## என்று வருமோ மின்சாரம்?

அல்வாய் நாவலடி, வியாபாரிமூலை, இன்பருட்டி, பொலிகண்டி ஆகிய பிரதேசங்களுக்கு 24 மணிநேரம் மின்சாரம் தருவதாக சென்ற வருட இறுதியில் வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போது டிசெம்பர் 25இல் 24 மணிநேர மின்சாரம் தரப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், வேலைகள் முற்றுப்பெறாததால் ஜனவரியில் தரப்படும் என்று கூறப்பட்டது. அப்போது வேலைகள் முற்றுப்பெறாததால் தைப்பொங்கலன்று நிச்சயம் தரப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. மின்சாரம் வழங்குவதற்கான பணிகளும் தைப்பொங்கலுக்கு ஓரிரு நாள்களுக்கு முன்பே முடிவடைந்துவிட்டன. அதனால் மக்கள் யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், ஏனோ இன்றுவரை எமக்கு 24 மணிநேர மின்சாரம் தரப்படவில்லை.

இப்போது எமக்கு ஒருநாள் விட்டு ஒருநாள் இரவு சிறிது நேரமும் அதிகாலை சிறிது நேரமுமே மின்சாரம் தரப்படுகின்றது. மின்சாரம் தரப்படாமையால் கிரிக்கெட் ரசிகர்கள் பாதிப்புறுகின்றனர். இறுதிப் போட்டிக்கு முன்பாக மின்சாரம் தரப்படாதா என ஏங்குகின்றனர். இவ்வருடம் ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை எடுக்கும் மாணவர்களும் இரவிலே விழித்திருந்து படிப்பதற்கு மின்சாரம் இன்றி பாதிப்புறுகின்றனர். வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டும் ஏன் இன்னும் தரப்படவில்லை என்பது புரியாத புதிராகவே உள்ளது.

'என்று வருமோ இந்தக் கரண்ட்' என்று 'பல்ப்' மேல் விழிவைத்து காத்திருக்கின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவில் மின்சாரம் தர ஆவண செய்வார்கள் என நம்புகிறோம்.

**பாதிக்கப்பட்ட மக்கள்.**

## கத்தோலிக்க ஆசிரியர் செயலமர்வு

மண்டைதீவு,மார்ச்17

தீவகக்கல்வி வலய பாடசாலைகளில் கத்தோலிக்க சமயம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-88)

## பௌர்ணமி தின கூட்டுப் பிரார்த்தனை

கோப்பாய் சைவ நற்சிந்தனைக் கழகத்தின் மாதாந்த பௌர்ணமி ஆத்ம தியான கூட்டுப் பிரார்த்தனை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோவில் வீதியில் உள்ள பஞ்சாட்சர இல்லத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிறப்புரையாக "ஆர்க கொலே சதுரர்" என்னும் தலைப்பில் சிவத்தமிழ் சொல்லழகர் ச.லலீசனின் சொற்பொழிவு இடம்பெறும். (எ-72)

## கோப்பாய் வடக்கில் கட்டாக்காலிகளால் பயிர்கள் நாசம்

கோப்பாய்,மார்ச்17

கோப்பாய் வடக்கு, மத்தி பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளால் பெருமளவில் பயிர்கள் நாசம் செய்யப்பட்டுவருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பல்வேறு தரப்பினரிடமும் புகார் தெரிவித்தபோதிலும் இதுவரை கட்டாக்காலிகளைப் பிடித்துக் கட்டுவது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-72)

## திருத்தாண்டவ முற்றோதல்

யாழ்ப்பாணம்,மார்ச்17

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் நல்லூர் தேரடி அறுபத்து மூவர் குருபூசை மடத்தில் திருத்தாண்டவ முற்றோதல் நடைபெறவுள்ளது.

இதேவேளை -

மேற்படி மன்றத்தின் ஆதரவில் மீசாலை ஸ்ரீ கதிர் வேலாயுதசுவாமி ஆலயத்தில் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பனவும் நடைபெறவுள்ளன. (எ-4)

## சின்னக்கடையின் மேல்மாடிக் கூரை வீழும் நிலையில்

குருநகர்,மார்ச்17

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையின் மேல்மாடிக் கூரை சேதமடைந்து வீழ்ந்துவிடும் நிலையில் காணப்படுகிறது.

இச்சந்தையில் இறைச்சிக் கடைகள் இயங்கிவரும் மேல்மாடிக் கூரையே பாரிய அளவு சேதமடைந்து காணப்படுவதுடன், கூரைக்கு போடப்பட்டுள்ள சீற்கள் சரிந்த நிலையில் காணப்படுகின்றன.

இக்கட்டடம் அமைந்துள்ள பகுதி பல வருடங்களாக சீருடையினரின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது.

சேதமடைந்துள்ள இப்பகுதி எப்போது வீழும் என்று கூறமுடியாத நிலையில் காணப்படுவதால், இக்கடைகளில் இறைச்சி வாங்கவரும் மக்களும் இறைச்சிக் கடை வியாபாரிகளும் நாளாந்தம் அச்ச உணர்வுடனேயே காலத்தைக் கழிக்கின்றனர்.

சேதமடைந்த பகுதியைத் திருத்தியமைக்குமாறு யாழ்மாநகரசபையை பல தடவைகள் கோரிய போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் மாநகரசபை மேற் கொள்ளவில்லையென குருநகர் வர்த்தகர் சங்கம் அறிந்துள்ளது. (எ-51)

## மனித உரிமைகள் குறித்து ஆலோசனை வழங்க உபகுழு நியமனம்

யாழ்ப்பாணம்,மார்ச்17

மனித உரிமைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குவதற்கென உபகுழுவொன்று அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவில் பேராசிரியர் தயா சோமசுந்தரம், பேராசிரியர் ப.ஆறுமுகம், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம், சுபியான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவானது மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ளதுடன், குடா நாட்டில் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆணைக் குழுவுடன் இணைந்து விசாரணைகளை மேற்கொள்ளும். (எ-10)

## கல்விச்சாலை காட்சிகள்




சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் சுவாமி ராஜ்குமார் ஆசியுரை வழங்குவதைப் படத்தில் காணலாம். மேடையில் பிரதம விருந்தினரான இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், வித்தியாலய அதிபர் எஸ்.கைலாசநாதன், அருட்தந்தை எஸ்.தேவதாசன் அடிகள் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (எ-29)



பருத்தித்துறை, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் ம.கணபதிப்பிள்ளை காணப்படுகிறார். (எ-15)



நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கான பாண்ட் வாத்தியக் கருவிகளை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் அணித் தலைவி செல்வி க.சுதர்சினியிடம் கையளிப்பதையும் வாத்திய அணியினர் இசை முழக்கம் வழங்குவதையும் படத்தில் காணலாம். (எ)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி பிரதேச செயலர் கே.கனகரத்தினம் வெற்றி பெற்ற இல்லத் தலைவர்களிடம் கேடயம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-173)

# திருமலை முத்தமிழ் விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்17

விடுதலைப் புலிகளின் கலை பண பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர் வரும் 20ஆம் திகதி முதல் 24ஆம் திகதிவரை திருகோணமலையில் நடைபெறவிருந்த இசை, நாடக, நடன விழா பிற்போடப்பட்டுள்ளதாக கலை பண்பாட்டுக்கழகம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழா நடைபெறும் புதிய திகதிகள் விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


# திருமண வாழ்த்து

மணமகன் **சிவனேசன்** (சிவா) — மணமகள் **மேனகா**

இன்று (17.03.2003) மணமங்கல வாழ்வில் ஒன்றிணையும் தம்பதியினரை பல நலமும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*டச்சு வீதி,*
*உடுவில்.*

- நண்பர்கள். (15670)



# YOGI BEAUTY PARLOUR
## LADIES HERBAL BEAUTY CARE & FITNESS CENTRE

யாழ். நகரில் முதன்முறையாக பெண்களுக்காக எமது அழகு நிலையம் யந்திரசாதனங்கள் மூலமாக நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் நவீன உடற்பயிற்சி சாதனங்கள் மூலமாக பெண்கள் கட்டான உடலமைப்பைப் பெறுவதற்காக பெண்களுக்கான ஜிம் (GYM) பயிற்சி வசதிகளும் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- ★ முகப்பரு சிகிச்சை
- ★ பொடுகு சிகிச்சை
- ★ முடி உதிர்தலுக்கான சிகிச்சை
  (High Frequency Treatment)
- ★ Gold Facial
- ★ Pearl Facial
  (Super Sonic Treatment)
- ★ கரும்புள்ளிகள் அகற்றுதல் (With Spot Remover)
- ★ Hair Rebonding
- ★ Hair Perming
- ★ Hair Colouring.

உங்கள் எண்ணத்தில் எங்கள் கைவண்ணம் சகல மங்கள வைபவங்களுக்கும் ஏற்ற ஒப்பனை அலங்காரங்களை வித்தியாசமாகவும் அழகாகவும் திருப்தியாகவும் செய்துகொள்வதற்கு எம்மை நாடுங்கள்

நீங்களும் அழகுக்கலை நிபுணர்களாக விரும்புகிறீர்களா? எமது அழகு நிலையத்தில் தற்பொழுது அழகுக்கலை Diploma பயிற்சி வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு:-

**MRS. YOGINI SHANMUGANATHAN**
*Dip.in.Cosmetology, Beauty Therapy, Hair Dressing & Home Science. (India, Co.Sri Lanka)*
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.Phone: 222 2796

(சி-26991)


ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

# 16ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 27 - 01 - 1928



மறைவு 04 - 03 - 2003

## அமரர் இராமலிங்கம் தம்பையா (பத்தர்)

அன்புடையீர்!

கடந்த 04.03.2003 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புக்கும் பாசத்திற்கும் இலக்கான அமரர் இராமலிங்கம் தம்பையா (பத்தர்) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 18.03.2003 செவ்வாய்க்கிழமை மு.ப. 9 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும். வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 19.03.2003 புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அமரரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வுகளின்போது வருகைதந்து, அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*மீனாட்சி அம்மன் கோவில் வீதி,*
*சங்கத்தானை,*
*சாவகச்சேரி.* (15669)

- குடும்பத்தினர்.

# நுண்ணுயிரியல் நிபுணர் யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,மார்ச்17

நுண்ணுயிரியல் நிபுணரும், சிரேஷ்ட விரிவுரையாளராக லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி மருத்துவ பீடத்தில் கடமையாற்றுபவருமான கலாநிதி ஜோன் கோல்ட்டன் இன்று திங்கட்கிழமை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு வருகைதர உள்ளார்.

இவர் குடல் சம்பந்தமான நோய்கள் மற்றும் அவற்றிற்கு காரணமாக இருக்கக்கூடிய பற்றீரியாக்கள் பற்றிய ஆராய்ச்சியில தற்சமயம் ஈடுபட்டுள்ளார். ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்து இலங்கையில் மேற்கு மாகாணப் பகுதியில் குடல் சம்பந்தமான நோய்களில் பற்றீரியாக்களின் பங்கு பற்றி ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ள இவர், வடபகுதியில் இது சம்பந்தமான ஆராய்சிகளை யாழ்.மருத்துவபீட நுண்ணுயிரியல் பகுதியுடன் இணைந்து மேற்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகளைப் பற்றிக் கலந்தாலோசிக்கவுள்ளார்.

இவர் குடல் சம்பந்தமான நோய்கள் பற்றிய விரிவுரை ஒன்றை இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நிகழ்த்துவுள்ளார். இதனைத் தொடர்ந்து மருத்துவக் கல்விக்கான பாடவிதானம் பற்றிய கருத்தரங்கொன்றையும் மருத்துவபீட விரிவுரையாளர்களுக்கு அவர் நடத்துவார். (ஓ)

# உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,மார்ச்17

யாழ். மாவட்ட கல்வி வலயங்களிடையே தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை நண்பகல் ஒரு மணிமுதல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி கொற்றாவத்தை அமெரிக்கன் மி.த.க. பாடசாலை.

யாழ். புனித யோசேப் மகா வித்தியாலயம் எதிர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி எதிர் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

(ஓ-86)

# சீருடைத் துணி விநியோகம்

யாழ்ப்பாணம்,மார்ச்17

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணி எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் யாழ்.ப.நோ.கூ.ச. கிளைகள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளது.

சீருடை பெறுவதற்கென கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பித்தவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் தத்தம் சங்கக் கிளைகளில சீருடைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ்.பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார்.

நாவாந்துறை தெற்கு (கிளை இல.1), வெள்ளாந்தெரு (இல.7), அரியகுளம் (இல.07), புங்கன்குளம் (இல.17), ஈச்சமோட்டை (இல.25), கண்டுக்குளி (இல.27), ஸ்ரேசனடி (இல.28), குருநகர் (இல.32) ஆகிய கிளைகளிலேயே இந்த சீருடைத்துணி விநியோகம் நடைபெறவுள்ளது.

(எ-4)

# திங்கள், வியாழன், சனி தினங்களில் கிராம அலுவலர் – மக்கள் சந்திப்பு

## கட்டாயமென அறிவிப்பு

கிராம அலுவலர்கள் திங்கள், வியாழன், சனி ஆகிய மூன்று தினங்களும் தமது அலுவலகங்களில் பொதுமக்களுக்கான சேவைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஏ.ஐ. விக்ரம, சுற்றறிக்கை மூலம் சகல பிரதேச செயலர்களுக்கும் அறிவித்துள்ளார்.

திங்கட்கிழமைகளில் காலை 9 மணிதொடக்கம் மாலை 5 மணி வரையும் -

வியாழன், சனிக் கிழமைகளிலும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 12 மணிவரையிலும் -

கிராம அலுவலர்கள் தமது பணிமனைகளில் தங்கியிருந்து பொதுமக்களைக் கண்டிப்பாகச் சந்திக்க வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஓ-175)


# கண்ணீர் அஞ்சலி

உசன், மிருசுவில் வசந்தா கல்வி நிறுவனத்தின் இயக்குநரும், சிரேஷ்ட கணிதத்துறை ஆசிரியருமான திரு. நல்லதம்பி தனபாலசிங்கம் (கிராம உத்தியோகத்தர், கொடிகாமம் தவசிகுளம்) அவர்களின் சகோதரன்

## நல்லதம்பி இராசகுலசிங்கம்

அவர்கள் 15.03.2003 அன்று வன்னியில் (விசுவமடு) இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

வசந்தா கல்வி நிலையம்,
*உசன், மிருசுவில்.* (15665)

ஆசிரியர்கள், மாணவர்கள்.


# மரண அறிவித்தல்கள்

## நல்லதம்பி இராசகுலசிங்கம்

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் விசுவமடு அதிசய விநாயகர் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராசகுலசிங்கம் (வவா) 15.03.2003 சனிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி நல்லதம்பி அவர்களின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நிரோசன், நிதர்சன், கௌசிகன், கௌசிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் குணபாலசிங்கம், தனபாலசிங்கம்(G.S. -கொடிகாமம் தெற்கு), இரத்தினசிங்கம் (தபாலதிபர், திருகோணமலை), பூபாலசிங்கம்(லண்டன்), பத்மராணி, புஸ்பராணி ஆகியோரின அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2003) திங்கட்கிழமை விசுமடுவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

*உசன்,*
*மிருசுவில்.* (15666)

தகவல்:
ந.தனபாலசிங்கம் (G.S.)
(சகோதரன்)

## திருமதி சரவணமுத்து சரஸ்வதி

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணமுத்து சரஸ்வதி அவர்கள் 10.03.2003 திங்கட்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் அன்பு மனைவியும் சிவபாக்கியம் (ஈஸ்வரி), மணிமேகலை ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லையா, அருளம்பலம் ஆகியோரின் அன்பு மாமியாரும் செல்வபாஸ்கரன், சிவபாஸ்கரன், தயாபரி, யசோதை, தயாபரன், ரூபி, லோஜன், சிவா, சியாமி, ரதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜனந்தினி, கபூர், ரோசினி, கிறிஸ்சாம், தக்ஷி, அன்னா, அகிசன் ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.03.2003 செவ்வாய்க்கிழமை அன்று சூராவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம், கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சூராவத்தை,*
*சுன்னாகம்.* (C/26989)

தகவல்:
திருமதி செல்லையா
சிவபாக்கியம் (ஈஸ்வரி - மகள்),
செ.இராசதுரை (பேறாமகன்)

## திருமதி செலஸ்ரீன் ரஞ்சிதம் முத்துவேலு

கோப்பாய் 4ஆம் கட்டையைச் சேர்ந்த திருமதி முத்துவேலு நேற்று (16.03.2003) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற டேவிட் ஹரியட் - செல்லம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ்சென்ற தோமஸ் ராஜசிங்கம் தம்பையா முத்துவேலு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சொர்ணம், டேவிட் ராசதுரை, சுகிர்தம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருமதி ராஜபதி யோசேப், ரவீந்திரராஜ் (மாகாண கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்), இந்திரராஜ் (கொழும்பு ரெலிக்கொம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயரஞ்சினி (உள்நாட்டு இறைவரித் திணைக்களம்) அவர்களின் அன்பு மாமியாரும் கெனத் (பரி.யோவான் கல்லூரி 2003), சலோமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி 2005) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (17.03.2003) திங்கட்கிழமை பி.ப.4.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் பரி.கன்னி மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4ஆம் கட்டை,*
*இருபாலை, கோப்பாய்.* (15672)

தகவல்:
மு.ரவீந்திரராஜ்
(மகன்)


தாளையடி ஐயனாரே சரணம்!

# சுன்னாகம்பதி ஐயனார் ஆலயத்தில் இன்று இரதோற்சவம்

அந்தப் பதியில் விதியென்ன சொன்னாலும் கதியென்று
வருவோரை கைவிடாத தெய்வமாகிய பார்த்தசாரதியின்
மைந்தன் பூரணை, புட்கலா, நாயகன் மணிகண்டன்
ஆரோகணித்து தேரேறிவந்து அருள்மழை பொழியும்
கண்கொள்ளாக் காட்சியைக் காண வாரீர்!

கனகசபை சுந்தரலிங்கம்.
(காரை. மணிகண்டன்)

(15667)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிறுவர் பாடசாலைக்கேற்ற நல்ல நிலையிலுள்ள மேசைகள், கதிரைகள் ஏனைய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.அரியராஜா, இல.143, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (15632)

நல்ல நிலையிலுள்ள Sony T.V. 2032 (கலர்-Japan), குளிர்சாதனப் பெட்டி (Japan), தையல் மெசின் (Singer), ஜெனரேற்றர் (Yamaha), டிஸ்க் அன்ரனா (அமெரிக்கா) என்பன விற்பனைக்குண்டு. (வீட்டுப்பாவனையில் இருந்தது) தொடர்பு: K.சிவானந்தன் 32/4, பலாலி வீதி, உரும்பிராய். T.P. 222 2168 (15639)

## நாய்கள் விற்பனைக்கு

டோபமன் பின்சர் (Doberman Pincher), சேபட் நாய்கள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகாபதி, ஆஸ்பத்திரி முன்பாக, மானிப்பாய்.(15634)

## ஒரு காதலின் கதை

350 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். 'தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தமிழ்த் தலைவர்கள் சத்தியாக்கிரகம்' செய்தது 1958ஆம் ஆண்டு இனக்கலவரம் எல்லாம் வருகின்றன. (15633)

## பிக்கு உட்பட மூவர் கைது!

கொழும்பு, மார்ச்17

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக் கூறி 10பேரிடம் ஒன்றரைக் கோடி ரூபாவரை பெற்று அவர்களை மோசடி செய்த இருவர் மாவனல்லைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கு உடந்தையாக செயற்பட்ட பிக்கு ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்களை விசாரித்த மாவனல்லை நீதிவான் எதிர்வரும் 19ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பணித்துள்ளார். (ஒ-12)

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

# முழுநிலாக் கருத்தரங்கு

காலம்: 18.03.2003 செவ்வாய்க்கிழமை (போயா தினம்)

நேரம்:- பிற்பகல் 3.30 மணி (S.L.S.T.)

தலைவர்:- திரு. K.S.குகதாசன்

இடம்:- யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்.

### நிகழ்ச்சி

தலைமையுரை:

கருத்துரை: டாக்டர் ந.ஜெயகுமார் M.B.B.S. (புற்றுநோய் வைத்தியசாலை மகரகம)

விடயம்:- புற்றுநோய் சபையோர் ஐயம் நீக்கல்

யாழ்.இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

ந.வித்தியாதரன்.
செயலாளர்.

(சி-26961)

---

## விடுதிக்காப்பாளர் பதவிக்கான வேலைவாய்ப்பு அறிவித்தல

நவஜீவனம் சிறுவர் பராமரிப்பு நிறுவனத்திற்கு விடுதிக்காப்பாளர் தேவை.

தேவையான தகைமைகள்.

- கல்வித் தகைமை:- க.பொ.த. (உ/த) சித்தி
- வயதெல்லை:- 25 - 40 வருடங்கள் (ஆண்)
- சம்பளம்:- நேரில் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பதாரி கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். (றோ.க. உட்பட)

உணவும் தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படும். சுயவிபரத்துடன் கூடிய விண்ணப்பங்கள் 31.03.2003 இற்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

நிர்வாகி,
நவஜீவனம் தருமபுரம், பரந்தன்.

(சி-26930)

---

# நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

## திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

# சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

இருபது ஆண்டுகளுக்கு முன் நான் பாலசிங்கத்தை சந்தித்து நேசிக்கத் தொடங்கிய போது, எனது வாழ்க்கை இத்தகைய திருப்பங்களைச் சந்திக்கும் என்று நான் நினைத்தே பார்க்கவில்லை. எனது சமூகக் கலாசார சூழலில் இருந்து முற்றிலும் முரண்பாடான சூழலைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்கின்றேன் என்ற அந்த ஒன்றே, எமது திருமணம் மறக்கமுடியாதபடி ஒரு வித்தியாசமான திருமணமாக அமைந்தது. அதெப்படி இரண்டு வெவ்வேறு கலாசாரங்களில் இருந்து வரும் இரண்டு பேர், திருமணம் என்ற பொதுத் தளத்தில் சந்திக்கக்கூடுமாக இருக்கின்றது? அது வெறும் உடற் கவர்ச்சியாக இருந்திருக்க முடியாது. கவர்ச்சிதான் என்றால் எமது அந்த உறவு அவ்வளவு ஆழமாகவும், நெஞ்சார்ந்தமாகவும் இருந்திருக்க முடியாது. அப்படியென்றால் எம்மைப் பிணைத்தது எது? இத்தகைய ஒரு சாதாரண பாதையில் என்னை அவரோடு இட்டுச் சென்றது எது?

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*

*இனியும் தாமதிக்காதீர்கள்*

உதயன் பத்திரிகை முகவர்களிடமும், பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

பக்கங்கள்: 479 விலை 500/-

---

மீண்டும்....

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்

நாளை மாலை 3.30 மணிக்கு

நாடக அரங்கக் கல்லூரி வழங்கும்

*திருமதி சாந்தினி சிவநேசனின் நெறியாள்கையில்*

# ஆர்கொலோ சதுரர்

- நடன நாடகம்

அனுமதி ரூபா 50/=

*வெக்கி மண்ணுலகை அலைக்கும் என்றாலும் குலுக்கி விண்வெளியைக் குலைக்கும் என்றாலும் இலட்சியம் நோக்கிய பயணம்___*



"ஆராயும், நீர் பாரும், ஆராரோ தேடும்"

கூட்டுருவாக்கம்
சாந்தினி சிவநேசன்
தவநாதன் றொபேட்
சா.சிவயோகன்
இ.முருகையன்
குழந்தை ம.சண்முகலிங்கம்

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 18 - 10 - 1930 | 15 - 02 - 2003 |

## திருமதி இராசையா சொர்ணம்மா

(குப்பிளான்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வம் திருமதி இராசையா சொர்ணம்மா அவர்கள் நீர்கொழும்பில் அவரது சகோதரன் சின்னத்தம்பி சொர்க்கலிங்கம் அவர்களின் இல்லத்தில் (15. 02. 2003) அன்று சிவபதமடைந்த செய்திகேட்டு, உடன் வந்து உதவிய அயலவர்களுக்கும் அன்னாரின் குப்பிளான் இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியையில் கலந்துகொண்டோருக்கும் தந்திமூலமும் தொலைபேசி மூலமும் எமது பிரிவுத் துயரில் கலந்து ஆறுதல் கூறியோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரது 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அவரது குப்பிளான் "சிவ இல்லத்தில்" இன்று (17. 03. 2003) திங்கட்கிழமை நடைபெறும். அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"சிவ இல்லம்",
குப்பிளான்,
ஏழாலை. (15658)

பிள்ளைகள்: விமலாவதி, திருமலர், தங்கராசா, சிவராசா, மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர், மைத்துனர் குடும்பத்தினர்.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## ஸ்ரீமதி பரமேஸ்வரி தர்மலிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08-01-1924 | 27-03-2002 |

திதி 17-03-2003

எமக்கொரு தாய் போல் நமக்கில்லையே
என்று இறைவன் அழைத்தானோ?
அந்தத் தாய்மையைத் தந்த இறைவன்கூட
இனியிந்தத் தாய்போல வருவானோ?

என்றும் எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் அம்மாவின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

த.நந்தகுமாரன்
பூதராயர் கோயிலடி,
ஆவரங்கால் பிள்ளையார் கோயில் முன்னொழுங்கை,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன். (15402)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
சகோதரிகள்,
மைத்துனர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 27 - 01 - 1931



மறைவு 15 - 02 - 2003

## அமரர் கதிரவேலு நடராசா

(இணுவில் மேற்கு)

குடும்பத் தலைவரே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்தும் அனுதாபச் செய்திகள், பிரசுரங்கள், பத்திரிகைகள் மூலமாக தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (17.03.2003) திங்கட்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*மன்னன் தோட்டம்,*
*இணுவில் மேற்கு.* (15662)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*Sri Ramajeyam*

## கணனி இயக்குநர் தேவை

எம்மால் புதிதாகத் திறக்கப்படவுள்ள SRI SAKKRAH COMPUTER EYE என்னும் கணனி நிறுவனத்திற்கு Type Setting, Adobe Photoshop என்பவற்றில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற பெண் கணனி இயக்குநர்கள் தேவை. தகுதியுள்ளவர்கள் நாளை (18.03.2003) செவ்வாய்க்கிழமை காலை சுபநேரம் 10.49 மணியிலிருந்து எதிர்வரும் (21.03.2003) வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10.00 மணிமுதல் 12.00 மணிவரை (பழைய நேரம்) நேரில் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்புகளுக்கு:*

**SRI SAKKRAH COMPUTER EYE,**
**NO, 7 1/6, Upstairs Modern Market,**
(15660) *Palaly Road, Thirunelveli Junction, Jaffna.*

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,மார்ச்17

துலன மீடிய யூனிட் அமைப்பின் ஏற்பாட்டில் இன்று மாலை 3.30 மணிக்கு யாழ்.சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள அகவொளி நிலையத்தில் 'பூரணையில் ஒரு மரணம்' என்னும் சிங்களத்திரைப் படம் காண்பிக்கப்படவுள்ளது.

இத்திரைப்படம் நிறைவுபெற்றதும் திரைப்பட இயக்குநர் பிரசன்ன வித்தனகேயுடன் சந்திப்பு ஒன்றை திரைப்படக் கலைஞர்கள் நடத்தவுள்ளனர்.

(ஈ-12)

## KTPM கணனி நிறுவனம்

வவுனியா

வருடந்தோறும் நடத்தும்

## இரசாயனவியல்

முன்னோடிப் பரீட்சை
2003 - ஏப்ரல்
இம்முறை யாழ்., மன்னார், கிளிநொச்சி மாணவர்களும் தோற்றலாம்.
*பரீட்சைத் திகதி:-* 30.03.2003
விண்ணப்பப் படிவங்களை ரூபா20 மாத்திரம் செலுத்தி
**Northern Technology (Pvt) Ltd.**
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
**Brightman Institute**
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
*முடிவு திகதி:* 23.03.2003
மேலதிக விவரங்களுக்கு:
(15659) 024-22521

## பணியாளர் தேவை

வயோதிபர் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணியாளர் (ஆண் / பெண்) ஒருவர் தேவை. தகுந்த சம்பளத்தை நேரில் பேசித்தீர்மானிக்கலாம்.

*தொடர்பு:* நா.நடராசா
இல.12, குமாரசாமி வீதி,
(15659) கந்தர்மடம்.

# பிறருக்காக வாழ்வோம்!

### தவக்காலச் சிந்தனை
பதின்மூன்றாம் நாள்

"நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக் 6:38)

தவக்காலத்தில் 13 ஆம் நாளில் காலடி எடுத்து வைக்கும் எமக்கு இறைவார்த்தை கூறுவதுதான என்ன? நாங்கள் எமது வாழ்க்கையில் பல காரியங்களைச் செய்கின்றோம். அவை நல்ல செயல்களாகவும் அமையலாம், தீய செயல்களாகவும் அமையலாம். எம்மைப் பொறுத்தவரை மற்றவர் எவ்வாறு பாதிக்கப்பட்டாலும் சரி, எமக்கு தோல்வி என்பதே வரக் கூடாது என்றே எதிர்பார்க்கின்றோம். அதற்காக நாம் என்ன விலை கொடுக்கவும் தயாராகவுள்ளோம். அதே வேளை, மற்றவர்களால் நாம் பாதிக்கப்படும்போது கவலையடைகின்றோம். இறைவனின் நம்பிக்கையிலேயே எமக்கு சந்தேகம் ஏற்படுகிறது.

இந்நிலையில்தான் இறைவன் மேற்கூறிய இறைவார்த்தையை அழுத்திக் கூறுகிறார். அதாவது நீங்கள் மற்றவர்களுக்கு என்ன செய்கிறீர்களோ அதையே உங்கள் வாழ்விலும் எதிர்பாருங்கள்.

நீங்கள் மற்றவர்களுக்கு தீமையை இழைத்துக்கொண்டு உங்களுக்கு நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது நியாயமானதா?

எனவே, எங்கள் வாழ்க்கையில் நாம் மற்றவரிடமிருந்து எதையெல்லாம் எதிர்பார்க்கின்றோமோ அவற்றையெல்லாம் நாம் பிறருக்கும் புரியவேண்டும். அவ்வாறு வாழும்போது எமது வாழ்வு ஒரு முழுமையான நிறைவை அடையமுடியும்.

ஆகவே, இந்தத் தவக்காலத்தில நாம் ஒவ்வொருவரும் எமது வாழ்வை பிறருக்காக, பிறரின் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதாக அமைக்க முற்படுவோம். எமது வாழ்வில் முழு நிறைவை அடைவோம்.

*சி.சி.கொலீந்திரன்*

# மரண அறிவித்தல்

## திருமதி மரியாம்பிள்ளை மரியபாக்கியம்

சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி மரியாம்பிள்ளை மரியபாக்கியம் அவர்கள் 14.03.2003 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் எஸ்ரெலா, திரேசா ஆகியோரின் சிறிய தாயாரும் சூசைதாஸ் அவர்களின் மாமியாரும் காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் அஞ்சலினா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோ.மேரி மல்லிகா (ஆசிரியை, சம்பத்தரிசியார் கல்லூரி), அருள்பிரகாசம், அருளானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் சிறிய தாயாரும் பிரேமரத்தினாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் சுன்னாகம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுன்னாகம்.* (15661)

தகவல்:
தொ.சூசைதாசன்.


23.03.2003 இதழில்




# சுடர் ஒளி

குடாநாட்டைக் கலக்கிய அந்த சில மணித்தியாலங்கள்
- வடபுலம்

இழப்புக்களை உறுதி செய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கை

கொள்ளையரின் தலைமையகமாக மாறும் வெள்ளவத்தைப் பிரதேசம்

விடுதலைக்கு பாடுபடுறவைக்கு ஒத்துழைப்பு கொடுக்க தயக்கம் ஏன்?
- தேரடி

கிழக்கு போர் முனையில் திருப்பம் ஏற்படுத்திய வவுணதீவுத் தாக்குதல்

ஜெயலலிதாவை தனிமைப் படுத்த அரசியல் அணி திரட்டும் கருணாநிதி

அடக் கடவுளே
-நகைச்சுவை விருந்து

மற்றொரு கறுப்பு ஜூலைக்கு காரணம் தேடும் எதிரணி

விலை 14/=

மற்றும் சினிமா, மசாலா மிக்ஸ், சிறுகதை, இணையத் தளங்களிலிருந்து, க்றைம், விளையாட்டு, சிறுவர் உட்பட பல ஆக்கங்கள்

(C-26990)

# 'ஸ்கிறிப்ற் நெற்' 3 ஆம் சுற்று பயிற்சிக்கு 10 திரைக்கதை எழுத்தாளர்கள் தெரிவு

யாழ்ப்பாணம்,மார்ச்17

லண்டன் 'ஸ்கிறிப்ற் நெற்' அமைப்பின் திரைக்கதை உருவாக்கலுக்கான மூன்றாம் சுற்றுப் பயிற்சி முகாமுககு யாழ்ப்பாணத்திலிருந்து 10 திரைக்கதை எழுத்தாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சி முகாம் நாளை 18 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோல் மண்டபத்திலும், எதிர்வரும் 24ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை கொழும்பிலுள்ள இலங்கை ஊடகப்பயிற்சி நிறுவனத்திலும் நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர், விவரம் வருமாறு:-

அமரதாஸ் (கிளிநொச்சி), பாஸ்கரன் (பருத்தித்துறை), கௌதமன் (மானிப்பாய்), ஜமுனாராணி (அச்சுவேலி), கேசவராஜன் (முள்ளியவளை), பவுலஸ் (மன்னார்), பிரேமினி (சாவகச்சேரி), இராகவன் (கரவெட்டி), சாரங்கா (சாவகச்சேரி), சாந்தன் (சுதுமலை). (ஜ-9)

## ரயில்வே திணைக்கள - பெற்றோலிய கூட்டுத்தாபன இழுபறிக்குத் தீர்வு

கொழும்பு,மார்ச்17

ரயில்வே திணைக்களம், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்த வேண்டியிருந்த 78 கோடி ரூபாவில் 36கோடி ரூபாவை திறைசேரி செலுத்தியுள்ளது. இதனால், ரயில்வே திணைக்களத்துக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையே கடந்த சில வாரங்களாக இருந்து வந்த இழுபறி முடிவுக்கு வந்துள்ளது.

ரயில்வே திணைக்களத்துக்கு வருடாந்தம் 110 கோடி ரூபா பெறுமதியான எரிபொருள் தேவைப்படுகின்றது. இதில் 50 சதவீதத்தைத் திறைசேரியும் எஞ்சிய தொகையை ரயில்வேத் திணைக்களமும் செலுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது என்று ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த சனி, ஞாயிறு தினங்களில் ரயில் சாரதிகளின் பொதுப் பரீட்சை காரணமாக தடைப்பட்டிருந்த ரயில் சேவைகள் இன்று முதல் வழமைபோல நடைபெறுமெனவும் ரயில்வே முகாமையாளர் தெரிவித்தார். (ஐ)

## நல்லூர் பிரதேச சபையில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,மார்ச்17

நல்லூர் பிரதேசசபை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடுவதற்கான நேர ஒழுங்கு பற்றி அறியத்தரப்பட்டுள்ளது.

இதற்கமைய நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை கொக்குவில் கிழக்கு நேதாஜி சனசமூக நிலையத்திலும் -

முற்பகல் 10.45 மணிமுதல் 12 மணிவரை கொக்குவில் கிழக்கு மனோன்மணி சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் 1 மணி முதல் 2.30 மணிவரை கொக்குவில் கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்திலும்- நாய்களுக்கான தடுப்பூசி போடப்படவுள்ளது.

அடுத்த மாதம் 03 ஆம் திகதி முற்பகல் 10.40 மணிமுதல் 12.30 மணிவரை கொக்குவில் மேற்கு வராகி அம்மன் கோவில் சனசமூக நிலையத்திலும் - பிற்பகல் 1 மணிமுதல் 2.30 மணிவரை கலைமகள் சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் 2.45 மணிமுதல் 3.45 மணிவரை காந்திஜி சனசமூக நிலையத்திலும் - நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

இதேவேளை, நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடுகளை நாய் வளர்ப்பவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள். (ஒ-12)

## கச்சாயில் கால் நடைகளை கட்டிவளர்க்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச்17

கச்சாய் பிரதேச வயல்களில் சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், அப்பகுதியில் கால் நடைகளைக் கட்டி வளர்க்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

கச்சாய் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற கிராம சேவையாளர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்ட கூட்டத்தில் இது குறித்து ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்டது.

இந்த அறிவித்தலை மீறி வயல்களைச் சேதப்படுத்தும் கால்நடைகள் பிடித்து பட்டியில் அடைக்கப்படும் எனவும் - அவற்றை விடுவிக்க தண்டப்பணம் செலுத்தவேண்டுமெனவும் - கால்நடை வளர்ப்போருக்கு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. (ஒ-74)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்17

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தில் 'அமுதசுரபி' அன்னதான சபை அறநெறிப் பாடசாலை, இந்து கலாசார நூலகம் ஆகியவற்றின் திறப்புவிழா நாளை காலை 10மணிக்கு இடம்பெறவுள்ளது.

நயினை நாகபூசணி அம்மன் ஆலய அன்னதான சபைத் தலைவர் த.சிவானந்தன் தலைமையில் இந்த விழா நடைபெறும்.

பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்வார். (ஜ-12)


இரசாயனவியல் கருத்தரங்கு

★ A/L 2003 பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்கான பரீட்சை நோக்கிலான கருத்தரங்கு.

கட்டணம் 150/=

ஆரம்பம் : 18.03. 8.00 a.m.

By: அன்பழகன்

குறிப்பு: நிறுவனத்தில் ஏற்கனவே கற்ற மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.

NEW SCIENCE CENTRE

யாழ்.நகர் (5321)



தவறிவிட்டது

வட்டு. தெற்கு, வட்டுக்கோட்டை நல்லமாவடியைச் சேர்ந்த இ.ரவீந்திரன் என்பவருடைய ஒரு பவுண் தங்க கைச்சங்கிலி ஒன்று நேற்று லீலா ஸ்ரோர்ஸ்' க்கும் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைந்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

லீலா ஸ்ரோர்ஸ்

மூளாய் வீதி,

வட்டு.தெற்கு,வட்டுக்கோட்டை. (15673)



முழு நிலாக் கருத்தரங்கு

பொருள் : மன அழுத்தத்திலிருந்து விடுபடுதல்

வழங்குபவர் : Dr சி.சிவதாஸ் M.B.B.S.

(பகுதிநேர விரிவுரையாளர், உள மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

காலம் : 18.03.2003 நேரம் : பி.ப. 3.30 மணி (இ.நே.)

இடம் : அகவொளி

குடும்ப வளத்துணை நிலையம்,

சென். பற்றிக்ஸ் றோட்,

யாழ்ப்பாணம்.

பங்குபற்றிப் பயன்பெற அனைவரையும் அழைக்கின்றோம்

(15656) - இயக்குநர்.


## மெய்வல்லுநருக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்17

தேசியரதியில் இடைநிலை மெய்வல்லுநர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டியில் பங்குபற்ற விரும்பும் இளைஞர், யுவதிகளிடமிருந்து இலங்கை மெய்வல்லுநர் சங்கம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

1975 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் 1982ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் இடையில் பிறந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள "அருணஸ் ஸ்போட்ஸ் ஸ்பொட்" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,மார்ச்17

யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கடந்த வருடம் நடத்தப்பட்ட சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்ட இப்போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் முறையே வருமாறு:-

**கீழ்ப்பிரிவு**

குணபாலசிங்கம் பாலிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), தனுஜா உருத்திரகோடீஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி), மோகனேஸ்வரன் ரமணன் (யாழ்.இந்துக்கல்லூரி).

**மத்தியபிரிவு**

நிருஷிகா சோதிநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), அபிராமி மகேந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி), தர்ஷினி உருத்திரகோடீஸ்வரன் (வேம்படி மகளிர் கல்லூரி).

**மேற்பிரிவு**

சிவபாதசுந்தரம் மயூரன் (சாவகசேரி இந்துக் கல்லூரி), விக்னேஸ்வரி கிருஷ்ணபிள்ளை(மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), திருமகள் மணிவண்ணன் (சாவகச்சேரி இந்துக். கல்லூரி).

**அதிமேற்பிரிவு**

அம்புஜாசினி சணேசமூர்த்தி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ரேகா இரத்தினசபாபதி (இணுவில் மத்திய கல்லூரி), வேணுகாராணி பாலசுப்பிரமணியம் (நயினாதீவு மகா வித்தியாலயம்).

இவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-4)


நிறுஞ்சனாஸ் சங்கானை

பிரபு, வைஜந்தி நடிக்க

வண்ணத்தமிழ் பாட்டு

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (ப.நே.)

இன்று இரவு 8.45 (பு.நே)

ஜக்கிஜான் நடித்த

RUSH HOUR - 2 (C-26838)

ராஜா யாழ்ப்பாணம்

இன்று முதல்

சரத்குமார், மீனா,வடிவேல்

மாயி (ரீலஸ்)

காட்சி நேரம் :10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்

விஜயகாந்த், சௌந்தர்யா, கவுண்டமணி, செந்தில் நடித்த

சொக்கத்தங்கம் (ரீலஸ்)

காட்சிகள் தினசரி : 11.00, 3.00,7.00 (பு.நேரம்)


## ஒலங்கா தலைமறைவு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்குத் தப்பிச் செல்லலாம் என்று கூறப்படுகின்றது. கென்யாவில் ஒலங்காவின் குடும்பம் இருக்கின்றது.

சனியன்று நடைபெற்ற ஆட்டத்தின் போது தமது கிரிக்கெட் வீரர்களைக் கவனிப்பதற்காக ஸிம்பாப்வே உளவுத்துறை அதிகாரிகள் 7 பேர் ஈஸ்ட் லண்டன் வந்திருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஒலங்காவைப் பாதுகாப்பாக தமது நாட்டுக்கு அழைத்துச் செல்வதற்கே தாம் வந்துள்ளதாக அவர்கள் ஒலங்காவிடமே கூறியதாகவும் கூறப்படுகின்றது.

முகாபே அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கையில் கறுப்புப்பட்டி அணிந்து உலகக் கிண்ணப் போட்டியின் முதல் ஆட்டங்களில் கலந்துகொண்டார் ஒலங்கா. அதன் பின்னர் 5 ஆட்டங்களில் அவர் அணியில் இடம்பெறவில்லை. கென்யாவுடனான 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் மட்டும் அவர் ஆடினார்.

ஒலங்கா ஸிம்பாப்வேக்குத் திரும்பினால் அவர் மீது தேசத் துரோகக் குற்றச்சாட்டு சுமத்தப்படும் என்று தெரிகிறது. அந்தக் குற்றத்துக்காக அதிகபட்சம் தூக்குத் தண்டனையும் விதிக்கப்படலாம்.

கடைசி ஆட்டத்துக்குப் பின்னர் ஒலங்கா ஸிம்பாப்வே அதிகாரிகளிடம் பிடிபடக்கூடாது என்பதற்காக உலகக் கிண்ண போட்டி ஏற்பாட்டாளர்கள் சனிக்கிழமை நண்பகலே ஹோட்டலில் இருந்து ஒலங்காவின் உடைமைகளை எடுத்துச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## ஒரு நாள் போட்டி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிக்க அணி முதல் சுற்றுடன் வெளியேறியதை அடுத்து அணியின் மூத்த உறுப்பினர்கள் இத்தகைய முடிவுகளை அறிவித்து வருகின்றனர்.

அணியின் சகலதுறை ஆட்டக்காரரான லான்ஸ் குளூஸ்னர் ஏற்கனவே தற்காலிக ஓய்வு வேண்டும் என்று அணியில் இருந்து விலகிவிட்டார். இந்த மாதத்தில் ஷார்ஜா மற்றும் பங்களாதேஷ் ஆகிய இடங்களில நடக்கும் போட்டிகளுக்கான தென்னாபிரிக்க அணியில் குளூஸ்னரின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை.

இதற்கான புதிய தென்னாபிரிக்க அணி நேற்று அறிவிக்கப்பட்டது. கிராண்ட் ஸ்மித் அணித் தலைவராக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலகக் கிண்ணப் போட்டியில் ஆடிய அணியில் இருந்த 5பேர் இந்தப் புதிய அணியில் இல்லை. ஹேர்ஸ்டன், குளூஸ்னர், நிக்கி போஜே, சார்ள் லன்ஜிவெல்ட் மற்றும் மொண்டசொன்டேகி ஆகிய ஐவரும் அணியில் இல்லை.

இவர்களுக்குப் பதிலாக பவுல் அடம்ஸ், அலன் டேவ்ஸன், நீல் மெக்கென்ஸி, ஜக்குவஸ் ருடொல்பா மற்றும் சார்ள் விலோஸ்ஙி ஆகியோர் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நீக்கப்பட்டவர்களில் வேகப் பந்துவீச்சாளர் மொண்டசொன்டேகி சனிக்கிழமை அன்று கார் விபத்து ஒன்றில் வலது தோட்பட்டையில் காயமடைந்தார். இன்னும் ஒரு மாதகாலத்துக்கு அவரால் விளையாட முடியாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## திராவிட்டின்.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடுப்பாட்டத்திற்குத் தகுந்த களமாக இருந்தும் அதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டோம்.

திராவிட் ஒரு சிறந்த வீரர் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை. பிடியை நழுவவிடுவது என்பது எப்போதுமே விருத்தம் தரக்கூடியதுதான். அதிலும் திராவிட் கொடுக்கும் பிடியை கோட்டைவிடுவது மாபெரும் துரதிர்ஷ்டம்.

வெறும் 146 ஓட்டங்கள் எடுத்துள்ளபோது எதிரணிதரும் அனைத்து வாய்ப்புகளையும் கட்டாயம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும்" - என்றார் பிளமிங்.

## விடை பெற்றார்.....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

துடுப்பாளரான அண்டி பிளவரும் வேகப் பந்துவீச்சாளரான ஹென்றி ஒலங்காவும் தமது ஓய்வு அறிவிப்பை வெளியிட்டனர்.

30 வயதான விட்டல், 46 டெஸ்ட் ஆட்டங்களிலும் 147 ஒருநாள் ஆட்டங்களிலும் விளையாடியுள்ளார். துடுப்பாளரும் வைதுகை மித வேகப் பந்துவீச்சாளருமான அவர் அணிக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார்.

இதேவேளை - ஸிம்பாப்வே அணி வீரர்கள் மேலும் பலரும் விரைவில் ஓய்வு பெறப்போவதாக நம்பப்படுகின்றது. (ம)

## அரையிறுதி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாக இருப்பா.

மூன்றாவது நடுவராக அவுஸ்திரேலியாவின் சிமொன் டவ்லும் ஆட்ட நடுவராக தென்னாபிரிக்காவின் மைக் ப்ரொக்டரும் கடமையாற்றுவர்.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் நடுவர்கள் மேற்கொண்ட மிக உயர்தரமான தீர்மானங்கள் மற்றும் ஆட்ட முகாமைத்துவம் போன்றவற்றின் அடிப்படையில் இவர்களின் நியமனங்கள் அமைந்ததாக ஐ.சி.சியின் பொதுமுகாமையாளர் டேவிட் ரிச்சர்ட்ஸன் தெரிவித்தார். இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தின் பின்னர் இறுதியாட்டத்துக்கான நடுவர்களின் விவரம் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (ம)

## தென்னாபிரிக்க...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டதற்கு பதிலளிக்க அவர் மறுத்து விட்டார்.

22வயதான ஸ்மித், இதுவரை 6 டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமே விளையாடி இருக்கின்றார். அவை அனைத்தும் தென்னாபிரிக்காவிலேயே நடந்தன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவ்வளவு இளம் வயதில், அனுபவம் குறைந்த ஒருவர் அணித் தலைவராக நியமிக்கப்படுவாரா என்பது சந்தேகத்துக்குரியது என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.


மரண அறிவித்தல்

சின்னத்தம்பி பாலசிங்கம்

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு நடுத்தெருவைச் சேர்ந்த சின்னத்தம்பி பாலசிங்கம் 15.03.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற சின்னத்தம்பி - அன்னமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சி.இரத்தினசிங்கம் (மலாயன் பென்சனியர்), செல்லையா - தோணம்மா (மலாயன் பென்சனியர்), சி.குலசிங்கம் M.B.E. (மலாயன் பென்சனியர்), மலேசியா சி.துரைசாமி (மலாயன் பென்சனியர், மலேசியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காந்தியம்மாவின் அன்புக் கணவரும் சுந்தராம்பாள், பாலகாந்தன், ஜெயகாந்தன் (கனடா), ரதிபாமாவாள், கமலாம்பாள் ஆகியோரின் அன்புத் தந்தையும் க.கந்தசாமி (ஓய்வுபெற்ற ஊழியர், திருகோணமலை துறைமுக கூட்டுத்தாபனம்), அன்னலக்சுமி, யோகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற வீ.கதிரமலை (ஆசிரியர், யா/விக்னேஸ்வராக் கல்லூரி - கரவெட்டி), M.சுந்தரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் Dr.ஜெயந்தி (மாவட்ட வைத்தியசாலை, திருகோணமலை), சாந்தன் (பொறியியலாளர், திருகோணமலை), தேவகி, பிரதீபன், அகிலன், சிந்துயா (கனடா), சாகித்தியா (கனடா), விமலராஜ், சித்ரா, சோபனா, செல்வப்பிரியா, கலியுகன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.03.2003) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு, சின்னத்தம்பி வளவு மத்தொனி, கரவெட்டி மேற்கில் நடைபெற்று, பூதவுடல் சோனப்பு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சின்னத்தம்பி வளவு,
மத்தொனி,
கரவெட்டி மேற்கு. (15671)

தகவல்.
பா.பாலகாந்தன்
(மகன்)

# 15 அமைச்சர்களை அல்லாட வைத்த அம்பாறை மாவட்ட ஐ.தே.க. முஸ்லிம்கள்

சாய்ந்தமருது,மார்ச்17

அம்பாறை மாவட்டக் கரையோரப் பகுதிகளில் உள்ள ஐ.தே.க. ஆதர வாளர்களான முஸ்லிம்களை அரசு கவனிக்கவில்லை. அவர்களை கைவிட்டுவிட்டது என்று குற்றஞ்சாட்டிக் கண்டனம் தெரிவித்ததோடு எச்சரிக்கையும் விடுத்ததை அடுத்து கடந்த சனிக்கிழமை முன் என்றுமில்லாதவாறு கல்முனைக்கு விரைந்து சென்ற 15 அமைச்சர்கள் அங்கே ஐ.தே.க. ஆதரவு முஸ்லிம்கள் தொடுத்த கேள்விக் கணைகளால் அல்லாடிப் போனார்கள்.

கல்முனை மஹ்முத் மகளிர் கல்லூரி மைதானத்தில் மக்களை அமைச்சர்கள் சந்தித்தார்கள். கூட்டம் நடந்தது. மக்கள் கேள்வியைக் கேட்பதற்கும் இடமளிக்கப்பட்டது.

ஆதரவாளர்கள் பலர் அப்போது தமது சீற்றத்தை வெளிப்படுத்தினர். ஆவேசமாக கண்டனங்களைத் தெரிவித்தனர். நீங்கள் எங்களை ஏமாற்றுவதற்காகவே இங்கு வந்துள்ளீர்கள்? நீங்கள் எமக்கு இதுவரை எதையாவது செய்தீர்களா? எந்த முகத்தோடு இப்போது இங்கே வந்திருக்கிறீர்கள் என்று ஆத்திரமடைந்திருந்த சிலர் சீறிப்பாய்ந்தார்கள்.

மயோன் முஸ்தபா எம்.பியைத் தொடர்ந்து பொம்மையாக வைத்திருக்கப் போகிறீர்களா? அப்படியானால் அவர் எம்.பியாக இருக்கத் தேவையில்லை என்று சிலர் கூறினர்.

மக்களின் ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் கண்ட அமைச்சர்கள் பொறுமைகாத்து சாவதானமாகப் பதிலளித்து மக்களை சாந்தப்படுத்தினர். சில கேள்விகள் அவர்களைத் திக்குமுக்காடச் செய்தன. கூட்டம் முடிந்தபின்னர் நடமாடும் சேவை நடைபெற்றது. அழிவுற்றநிலையில் உள்ள சவளக்கடை அரிசியாலை, கல்முனை தபால் அலுவலகம், நெல் சந்தைப்படுத்தும் நிலையம், நீதிவான் பங்களா, வாடிவீடு, சாய்ந்த மருது படகிறங்குதுறை, கிட்டங்கிப் பாலம முதலானவற்றை அமைச்சர்கள் பார்வையிட்டார்கள்.

சில அபிவிருத்தி வேலைகளை உடனடியாக மேற்கொள்வதற்குப் பணிப்புரையும் விடுத்தார்கள்.

44 இந்து ஆலயங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் புனரமைப்புக்கு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நிதி உதவி வழங்கினார்.(ஐ)

## கட்டுரைப்போட்டி

சதாவதானி கதிரவேற்பிள்ளை குருபூசை தினத்தை ஒட்டி கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.


'ஈழத்தில் புகழ் பூத்த அறிஞர்களுள் சதாவதானி', 'சதாவதானியும் அவர் படைத்த அரும் சொத்துக்களும்', 'நெஞ்சைவிட்டகலாத சதாவதானியின் பணிகள்' ஆகிய மூன்று தலைப்புகளில் நடத்தப்படும் கட்டுரைப் போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் தமது கட்டுரைகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-173)

இந்தியா போட்டா ஆச்சிரம இறை தியானக் குழுவினரால் நடத்தப்படும்

இறை தியான

குணமாக்கல்

வழிபாடுகள்



மார்ச் 19, 20, 21 ஆம் திகதிகளில்

யாழ்.புனித அடைக்கல அன்னை

ஆலய முன்றிலில்

நிதமும் மாலை 3.30 முதல் 7 மணி வரை.



இவ்வழிபாடுகளில் பங்குபற்றுவோர் மூன்று தினங்களும் தொடர்ச்சியாகப் பங்குபற்றுவது மிகுந்த பலனைக்கொடுக்கும்.

தும்பளை திருத்தலத்தில்
21.03.2003 வெள்ளி காலை 9-12 வரை
குணமாக்கல் வழிபாடு

குருக்கள், துறவியர், அருட்சகோதரிகளுக்கு
20.03.2003 வியாழன் - காலை 9.30-12.30 வரை
ஆயர் இல்லத்தில்

பாவ வாழ்விலிருந்து விடுதலைபெற, கவலைகள், கஷ்டங்கள் நீங்கி அமைதிபெற,
நோய்கள் நீங்க, உலக அமைதி பிறக்க நம்பிக்கையோடு வாருங்கள்.
(இறுதி பேருந்தில் வீடு திரும்பலாம். மூன்று நாள்களுக்கும் தங்கியிருக்க விரும்புவோருக்கு தங்குமிட வசதிகள் உண்டு.)

இறைதியான குழுவினர். (15290) - ஆயர் இல்லம்.

வல்வெட்டியில்.... தாபி வீதியில்...

இணைய சேவைப் பூங்கா

ISP COMMUNICATION

வாடிக்கையாளர்களே... ஏனையோர்களே...

உங்களுக்காக எங்கள் தொலைபேசிக் கட்டணம்

உள்வரும் அழைப்பு - 2/- உள்நாட்டு அழைப்பு - 8/-

இன்ரநெட் அழைப்பு

| | | | |
|---|---|---|---|
| கனடா<br>லண்டன் | 25/- | சுவிஸ்<br>ஜேர்மன்<br>பிரான்ஸ்<br>அவுஸ்திரேலியா<br>நியூஸிலாந்து<br>ஏனையவை | 30/- |
| அமெரிக்கா<br>இந்தியா | 75/- | | |
| கைத்தொலைபேசி<br>மத்திய கிழக்கு நாடு | 60/- | | |

(தி-26943)

COMPUTER PRINTING  TYPE SETTING  SCANNING
COMPUTER CLASSES  TENCIL CUTTING  CD WRITING
✳ வீடியோ CD வாடகைக்கு விடப்படும் ✳

# வற்றாப்பளை ஆலயத்தில் வெள்ளியன்று கும்பாபிஷேகம்

வற்றாப்பளை அருள்மிகு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் இன்று காலை ஆரம்பமாகவுள்ளன.

அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது. நேர்த்தி நிறைவேற்றும் அடியவர்கள், முதல் நாள் ஆலயத்தில் பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ-12)

## சாயி சமித்தியில் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

திருநெல்வேலியிலுள்ள பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா சமித்தியில் நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆன்மீக நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (ஐ)

# தாக்கி அழிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த அரசின் ஆட்சியின் காலத்தில் ஆட்டிலறிகளை வடக்கிற்கும் கிழக்கிற்குமாக ஏற்றிப் பறிப்பதற்கு இராணுவமும் கடற்படையும் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல.

திருகோணமலை பிறிமா மாஆலையில் உள்ள கிரேன் அவசர காலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம்- வர்த்தமானி அறிவித்தலின்படி - ஆட்டிலறிகளை ஏற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டது. அதேபோல காங்கேசன் துறையிலும் மிகுந்த சிரமத்தின் மத்தியில் ஆட்டிலறிகள் ஏற்றி இறக்கப்பட்டன.

'கிரேன்' மூலம் ட்ரோலருக்கு பாரங்களை இறக்கும் போது அந்த ட்ரோலர் அளவுக்கு அதிகமாக ஆடக்கூடாது. சுமார் 3பாகை சாய்விற்கு அதிகமாக அந்த ட்ரோலர் தளம்பிக் கொண்டிருந்தால் இறக்கப்படும் பாரத்தால் ட்ரோலர் புரட்டப்பட்டுவிடும்.

நடுக்கடலில் ட்ரோலர் ஒன்று தளம்பாமல் - ஆடாமல் - நிற்குமா என்பது சந்தேகமே. அத்துடன் ஆறு தொன் எடை தாங்கும் ட்ரோலர்கள் புலிகளிடம் இல்லை. தாக்கியழிக்கப்பட்ட கப்பலும் கடற்படை கூறுவது போல 130 மில்லிமீற்றர் ஆட்டிலறிகள பாரத்தை சுமக்கக் கூடிய தரமானதில்லை என்று இக்பால் அத்தாஸ் தெரிவித்திருக்கிறார். (ஐ)

## அரசுக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக நடத்துவதற்கான அடித்தளத்தை இப்பேச்சுக்களில் இடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பீரிஸ் கூறியிருக்கிறார்.

புலிகளின் பிரதிநிதிகள் பயணம் செய்த விமானம் நேற்றிரவு 10.00 மணிக்குப்பின் கட்டுநாயக்காவில் இருந்து புறப்பட்டது. நோர்வேப் பிரதிநிதிகளும் அந்த விமானத்திலேயே பயணம் செய்தனர். அரச தரப்புக்குழுவில் இடம்பெறும் ஜெனரல் சாந்த கொட்டகொடவும் அவர்களோடு அந்த விமானத்திலேயே பயணமானார்.

அந்த விமானம் நேற்றிரவு மாலைதீவு தலைநகரில் சிறிது நேரம்தரித்த பின்னர் டோக்கியோவுக்கு புறப்பட்டது. (ஐ-9)

# தாக்குதல்கள் இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிபலிப்போம்.

அத்துடன் மக்களின் உடனடி இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துவோம். அழுநாகானா ஆக்கபூர்வ செயற்றிட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவும் முயற்சிப்போம்.

உயர் பாதுகாப்புவலயம் உட்பட சகல விடயங்களுக்கும் உடன் தீர்வு காணக்கூடிய வகையில் எமது பேச்சுக்கள் அமையும் என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஜப்பானில் நாளை ஆரம்பமாகவிருக்கும் சமாதானப் பேச்சில் பங்குபற்றுவதற்காக ஜப்பான் செல்லும் வழியில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு கொழும்புக்குப் புறப்பட்ட விடுதலைப் புலிகளின் தூதுக்குழுவினரை கிளிநொச்சியில் அன்புகலந்த மகிழ்ச்சியுடன் பொதுமக்களும் போராளிகளும் வழிஅனுப்பிவைத்தனர்.

முற்பகல் 11.25 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கில் வந்து இறங்கிய CH 522 என்ற இலக்கமுடைய ராஜதந்திரிகளுக்கான ஹெலியில் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் அவரது பாரியார் அடேல் பாலசிங்கமும் மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி கருணாவும் ஏறிக்கொண்டனர்.

விமானப்படையின் மற்றொரு ஹெலியில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன், புலித்தேவன் மற்றும் தமிழ்ச் செல்வனின் உதவியாளர்களான அலெக்ஸ், நெடியோன், தொல்காப்பியன் ஆகியோரும் ஏறினர்.

இந்த வழியனுப்பும் நிகழ்வில் தளபதிகளான கேணல் பதுமன், கேணல் பானு, பொட்டு அம்மான், கேணல் துர்க்கா, கேணல் விதுஷா, சசிகுமார் மற்றும் பலதுறை சார்ந்த பிரிவுகளின் பொறுப்பாளர்கள், போராளிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர்.

மைதானத்துக்கு வெளியே கூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள கையசைத்து குழுவினரை வழி அனுப்பிவைத்தனர். (ஐ-9-3-8)

CHEMISTRY CENTRE

பலாலி வீதி, கந்தர்மடம்.

"ORGANIC"

ஆரம்பம்:- இன்று 1.00 p.m

"CHEMISTRY PAPER"

ஆரம்பம்:- இன்று 1.00 p.m

(5321)

By:- அன்பழகன்

LIONAIR

LANKA'S PRIDE IN THE SKY

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

பாதுகாப்பான ~ சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு:

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்.

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(பி26688)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிரைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.